# உதயன்

14 MAY 1998 மாநகராட்சி

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 31 (14-05-1998) வியாழக்கிழமை UTHAYAN– Abively National Tamil Daily கதிர்: 143


## மேலும் 2 அணு வெடிப்புக்களை இந்தியா நேற்று பரிசோதித்தது!

புதுடில்லி, மே 14

இந்தியா நேற்று மீண்டும் இரு அணு வெடிப்புப் பரிசோதனைகளை வெற்றிகரமாக நடத்தி உள்ளது.

ராஜஸ்தான் மாநில பாலைவனத்திலேயே இந்த அணு வெடிப்பு பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை மூன்று அணு வெடிப்புப் பரிசோதனைகளை இந்தியா நடத்தி இருந்தது தெரிந்ததே.

அணு வெடிப்புப் பரிசோதனை வரிசையில் நேற்று நடத்தப்பட்ட பரிசோதனையுடன் இந்தியாவின் அணு வெடிப்புப் பரிசோதனை திட்டம் பூர்த்தி அடைந்துள்ளதாக இந்திய அதிகாரிகள் புதுடில்லியில் தெரிவித்தனர்.

காற்று மண்டலத்தில் கதிர் வீச்சு எதுவும் வெளியாகாத வண்ணம் பாதுகாப்பாக இந்த சோதனைகள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று பரிசோதிக்கப்பட்ட அணு வெடிப்புக்கள் கடந்த திங்கட்கிழமை பரிசோதிக்கப்பட்ட அணு வெடிப்புக்களை விட சக்தி குறைந்தவை என்றும் கூறப்படுகின்றது.

(இ-6-3)

## புளொட் உறுப்பினர்களின் இறுதிக் கிரியை இன்று

### உமாமகேஸ்வரன் சமாதியில்

வவுனியா, மே 14

வவுனியா கோயிற்குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பில் உயிரிழந்த புளொட் தளபதி மற்றும் உறுப்பினர்களின் இறுதிக் கிரியைகள் இன்று வவுனியா கோயில்குளத்தில் உள்ள உமாமகேஸ்வரன் சமாதியில் இடம்பெறவுள்ளன.

வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்து நேற்றுக் காலை சடலங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு உமாமகேஸ்வரன் சமாதியில் வைக்கப்பட்டுள்ளன.

ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன், இச்சம்பவம் மூலம் தமிழ்க் கட்சிகள், தமிழ் இயக்கங்கள் இடையே ஒற்றுமை குறைந்துள்ளது. இச் சம்பவத்தை யார் செய்தார்கள் என்பதை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது!

## ஜேர்மனியில் கிளின்ரன் கைச்சாத்து

வாஷிங்டன், மே 14

அணு வெடிப்புப் பரிசோதனைகளை நடத்திய இந்தியாவுக்கு எதிராக அதிபர் பில் கிளின்ரன் பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளார்.

அதிபர் கிளின்ரன் நேற்று ஜேர்மனியில் பயணம் மேற்கொண்டிருந்த சமயம் இது தொடர்பான ஆவணங்களில் கையெழுத்திட்டார்.

கிளின்ரன் அறிவித்துள்ள பொருளாதாரத் தடைகளால், இந்தியாவுக்கான அமெரிக்காவின் நேரடிஉதவிகள் அனைத்தும் ரத்துச்செய்யப்படுகின்றன.

வருடம் 14 கோடி டொலர்களுக்கு அதிகமான நேரடி உதவிகளை அமெரிக்காவிடமிருந்து இந்தியா பெற்று வந்தது.

அத்துடன் இந்திய அரசாங்கம் அமெரிக்க வங்கிகளில் கடன் பெறுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கம்பியூட்டர்கள், ராணுவ நோக்கங்களுக்குப் பயனபடுத்தக் கூடிய உபகரணங்கள் தொழிநுட்பங்கள் ஆகியவற்றை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பிரதான வர்த்தகப் பங்காளியான இந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை இரு ஆண்டுகள் நீடிப்பு

புதுடில்லி, மே 14

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய மத்திய அரசாங்கம் மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசாங்கம் தடை விதித்தது. இந்தத் தடை நாளையோடு முடிவுக்கு வருவதனால் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அது நீடிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் பின்னணிசதி பற்றி ஆராய்ந்த ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையை ஆய்வு செய்வதற்காக செயலர்கள் அளவிலான குழுவையும் அவர்களுக்கு உதவத் துணைக் குழுவையும் அமைப்பது என்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

(இ-6)

## வன்னியில் எழுச்சி விழா

வவுனியா, மே 14

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை எதிர்த் தாக்குதலில் ஓராண்டு பூர்த்தியை யொட்டி வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் நேற்று பொதுமக்கள் இனிப்புப் பண்டங்கள் வழங்கி எழுச்சி விழாக் கொண்டாடியதாக வவுனியாவுக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

''வெற்றியை எமதாக்குவோம்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சின்னங்களை மக்கள் அணிந்திருந்தனர். ஊர்வலங்கள், கூட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கி. மீற்றருக்கு 56 பேரை பலி எடுத்த வெற்றி உறுதி

''வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் கிடைத்துள்ள தரவுகளின்படி ஒவ்வொரு கிலோ மீற்றர் தூரத்துக்கும் 56 பேர் உயிரிழந்துள்ளனர்'' என்று ஏ. எவ். பி. செய்தியாளர் அமால் ஜெயசிங்க பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு தெரிவித்தார்.

மாதம் ஒன்றுக்கு இருதரப்பிலும் 200 முதல் 250 வரையான உயிர்கள் இழக்கப்படுகின்றன. உத்தியோக தரவுகளின்படி ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 56 உயிர்கள் இழக்கப்படுகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் எதிர்வரும் நாள்களில் மேலும் கடும் சண்டைகள் மூளும்!

## பிரபா எச்சரிப்பதாக ரோய்ட்டர் தகவல்

கொழும்பு, மே 14

வன்னியில் எதிர்வரும் நாள்களில் மேலும் கடும் சண்டைகள் மூளும் என்று விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எச்சரித்துள்ளதாக ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் இரத்த ஆறு ஓடப் போகிறது. ஸ்ரீலங்கா ராணுவம் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க இருக்கிறது என்றும் பிரபாகரன் தெரிவித்ததாக ரோய்ட்டர் தெரிவித்தது.

வவுனியாவில்இருந்து வடக்குக்கான பிரதான பாதையை திறப்பதற்கான வெற்றி உறுதி இராணுவநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைவதை முன்னிட்டு விடுதலைப்புலிகள் தலைவர் நேற்று புதன் கிழமை புலிகளின் வானொலியில் விடுத்த செய்தியில் இதனைத் தெரிவித்ததாகவும் ரோய்ட்டர் தெரிவித்தது.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய நாள் இன்று.

ஸ்ரீலங்கா அரசின் மிகப் பெரும் படை எடுப்பான ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையை நாம் எதிர்த்து நின்று போராடி இன்றுடன் ஓராண்டு பூர்த்தி அடைகிறது.

மூன்று மாத காலத்துக்குள் முடித்துவிடுவதாக போர்ப் பறை சாற்றி பெரும் பிரசாரஎடுப்புடன் ஆரம்பமான இந்தப் போர் நடவடிக்கை இன்றுடன் ஒரு வருடமாகியும் இன்னும் முடிவு பெறாமல் இழுபடுகிறது.

ஒரு வருடகாலத்தை எட்டி

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தாக்குதல் இரு பொலீஸார் பலி!

வவுனியா செய்தியாளர்—

பூவரசங்குளம் வீதியில் நேற்றுக் காலை 7.30 மணிக்கு வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் 2 பொலீஸார் உயிரிழந்தனர்; இரு பொலீஸார் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த விடுதலைப்புலி அமைப்பின் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ-3-6-21-164)

இளைய தலைமுறையின் இதயம் ... ம் இன்றைய நா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தில்லையீஸ்வரி தெய்வேந்திரசிங்

திருமதி தில்லையீஸ்வரி தெய்வேந்திரசிங் 06-05-1998 அன்று கொழும்பு மகரகமவில் காலமானார்.

அன்னார் அம்பலவாணர் வீதி, உடுவிலைச்சேர்ந்த கின்னத்தம்பி தெய்வேந்திரசிங்கின் (இளைப்பாறிய பொதுச்சுகாதாரப் பரிசோதகர்) மனைவியும், சபாரட்ணம் சிதம்பரநாதன் (தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு), செல்வி சபாரட்ணம் தாமரைக்குமாரி (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், தெ. ரமேஷ், தெ. துஷிமளா ஆகியோரின் தாயாரும், சகிலா, சுதாகர் (பல்கலைக்கழகம், மட்டக்களப்பு) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு.தெய்வேந்திரசிங்
(கணவர்)

உதயசூரியன் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(55982)

## இராசதுரை தங்கம்மா
(அம்மாளாச்சி)

கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த இராசதுரை தங்கம்மா 13-05-98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், சீவரத்தினத்தின் தாயாரும், சரோஜினி தேவியின் மாமியாரும், இரகுநாதனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(14-05-98) காலை 10-00 மணிக்கு காரைக்கால் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
இ. சீவரத்தினம்
(மகன்)

''குமரகோட்டம்'',
கோண்டாவில்.

(55410)

## விநாயகமூர்த்தி சின்னம்மா
[குங்குலியம்]
ஆசிரியை, ஓய்வுபெற்ற ஆசிரியை,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட விநாயகமூர்த்தி சின்னம்மா 12-05-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த.வேலாயுதபிள்ளை (சகோதரன்)
(உபஅதிபர், சுதுமலை வடக்கு,
தமிழ்க்கலவன் பாடசாலை)

இணுவில் தெற்கு.

(55997)

## திருமதி
## லட்சுமி தாமோதரம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை)

வதிரியைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி இலட்சுமிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை ஆஸ்திரேலியாவில் 4-5-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆசிரியர் தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், சூரியகலா (Australia), காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், நரேந்திரன் (Australia) அவர்களின் அன்பு மாமியாரும், லக்ஷிகா, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

இவரது ஈமக்கிரியைகள் 10-5-98 இல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி ஆர். செல்லப்பா

கொடிகாமம்.

(55988)

## ஜெகநாதன் பகீரதன்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடா (டொறன்ரோ)வை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் பகீரதன் 11-5-98 அன்று கனடாவில் காலமானார்.

இவர் சத்தியதர்சினியின் அன்புக் கணவரும், பிருந்தனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெகநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மகனும், டாக்டர் இராசேந்திரம், திலகவதி ஆகியோரின் அன்பு மருமகனும், அசோகன், ஜெயானி, விசாகன், விஜயன், விமலன், ஜனார்த்தன், ஜீவகன், அகிலன், கிரிதரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-5-1998 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவின்ர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. சுதாகரன்
(மைத்துனர்)

'' தர்கிநிகால்''
பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(55987)

## தபால் பொதி இன்று வரும்

யாழ்ப்பாணம், மே 14

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர் தபால்கள் அடங்கிய ஒரு தொகுதி பொதிகள் இன்று வியாழக்கிழமை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவரப் படவுள்ளன.

வாரந்தோறும் புதன் கிழமைகளில் நடைபெற்றுவந்த கப்பல் சேவை வெசாக் விடுமுறையை ஒட்டித் தாமதமாகி இன்று வியாழக்கிழமை இடம்பெறுகின்றது. (ஐ-7)


எமது
புதிய வெளியீடு!
புது முகங்களின்
★ வண்ணத்திரை
வீடியோ
CD வெளியீடு!
பாண்டியராஜன்
சுவலட்சுமி - நடித்த
கவலைப்படாதே
சகோதரா
சுப்பரேஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3741)

ஷண்
CD வெளியீடு!
★ ஜாலி
★ காதலித்துப்பார்
★ உன்னுடன்
★ அரிச்சந்திரா
★ பூ மழை
★ TITANIC
(உண்மைச் சம்பவம்)
$3\frac{1}{2}$ மணித்தியாலம் ஒரே கொப்பியாக CD மூலம் பதிவு செய்யப்பட்டது.
ஷண்
றெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(56004)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்
அகல வெண் திரையில்
14-05-98 வியாழன்
அஜித்குமார் - சிம்ரான்
நடித்த
அவள் வருவாளா
(பழைய நேரம்)
காட்சி 10-30 — 2-30
(56001)

யாழ்.
றீகல் வெண் திரையில்
தினசரி காலை 8-30
TITANIC
இது ஒரு பரிதாப சம்பவம்
இன்று மட்டும்!
10-30, 2-30
அஜித், சிம்ரான்
கவுண்டமணி, செந்தில்
நடித்த
அவள் வருவாளா
அடுத்த வெளியீடு
காதலே நிம்மதி
(CD வெளியீடு)
(56006)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று
முரளி (இருவேடத்தில்)
ரேவதி, சங்கீதா,
வடிவேலு, மகேஸ்வரி
நடித்த
ரத்னா
புதிய வெளியீடு
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி இல.
070 212229
(55969)


# மரண அறிவித்தல்கள்

## திருநேசராசா நிர்மலா

நீர்வேலி அச்செழுவைப் பிறப்பிடமாகவும், தற்போது வவுனியாவில் வசித்துவந்தவருமான திருநேசராசா நிர்மலா 12-05-98 அன்று அகால மரணமானார்.

இவர் திருநேசராசா (ராசு) தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், ஜனோமினாவின் அன்புச் சகோதரியும், திரு. திருமதி சந்திரராசா, அன்னம்மா, பரமேஸ்வரி, ஜெயகௌரி ஆகியோரின் பெறாமகளும், நடராசா, வேலாயுதபிள்ளை, பிறைசூடி ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. பரமேஸ்வரி
(சித்தி)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(56005)

## திருமதி
## செல்லமுத்தர் பாக்கியம்

நாவற்குழியைச் சேர்ந்த திருமதி செல்லமுத்தர் பாக்கியம் 13 — 05 — 1998 நேற்று காலமானார்.

அன்னார் குரும்பசிட்டியைச் சேர்ந்த செல்லமுத்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி சேதுப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், சதானந்தமூர்த்தி (ஹற்றன் நஷனல் வங்கி, நகர அலுவலகம், கொழும்பு), சதாசிவமூர்த்தி (தொழில் நுட்ப உத்தியோகத்தர் கச்சேரி, யாழ்ப்பாணம்), செல்வராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பராசக்தி சுகந்தினி (நூலகர், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்), கிருஸ்ணகுமார் (அரசாங்க ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், புரந்தகி, நிராதன், சயந்தவி, அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கணபதிப்பிள்ளை அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14 - 05 - 98 இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நாவற்குழியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிண முருங்கை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. சதாசிவமூர்த்தி
(மூர்த்தி, மகன்)

கேரதீவு வீதி, நாவற்குழி,
கைதடி.

(55999)

## துரைரத்தினம் றோசரத்தினம்
(அராலி கிழக்கு)

நவாலியைப் பிறப்பிடமாகவும், அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் றோசரத்தினம் 11-05-1998 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்திய கலாநிதி துரைரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி, நிஷங்காதேவி, மோகனதாஸ் (வைத்திய கலாநிதி - ஹோமியோபதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியநாதன், விநாயகமூர்த்தி, மனோறஞ்சிதம் ஆகியோரது அன்பு மாமியாரும், அகிலன், துவாரகன், லக்ஷிக்கா, துஷாறகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (12-05-1998) அராலியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
து. மோகனதாஸ்
(மகன்)

அராலி கிழக்கு,
அராலி.

(55978)

## நாகலிங்கம் கந்தையா
(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா 11-05-1998 அன்று காலமானார்.

அன்னார் செண்பகலக்ஷ்மியின் அன்புக் கணவரும், மனோகரன் (கனடா), சரோஜினி, றஞ்ஜினி (ஆசிரியை, யா/ மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை, யாழ். பல்கலைக்கழகம்), சிவகரன் (கனடா), ஜெயகரன் (நோர்வே), சேகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-5-98) காலை 10.00 மணிக்கு'' ரதி வாசா''இணுவில் மேற்கு, இணுவிலில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி எஸ். கந்தையா

''ரதி வாசா'',
இணுவில் மேற்கு.

(56000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டம் செய்த மாணவர் மீது இந்தோனேசியாவில் பொலீஸார் சூடு!

## ஆறுபேர் பலி! பலர் படுகாயம்!!

ஜகார்த்தா, மே 14

அதிபர் சுஹார்ட்டோவைப் பதவி விலகுமாறு கோரி இந்தோனேசிய தலைநகரான ஜகார்த்தாவில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்த பல்கலைக்கழக மாணவர்களைக் கலைக்க பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 மாணவர்கள் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

கல்லூரி வளாகத்துக்கு வெளியே மாணவர்கள் கூட்டமாகக் கூடுவதற்கு அரசினால் விதிக்கப்பட்டுள்ள அதிகார பூர்வத்தடையையும் மீறி தனியார் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களால் அந்த ஆர்ப்பாட்டம் திட்டமிட்டு நடத்தப்பட்டது.


பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து திடீரென வெளியேறி ஜகார்த்தாவில் வாகனங்கள் பணம் செலுத்திப் போக்குவரத்துச் செய்யும் வீதி ஒன்றின் குறுக்கே வந்த மாணவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்காக மேலதிக படையினர் ஜகார்த்தாவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேசிய அதிபர் சுஹார்ட்டோ பதவி விலக வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திவரும் மாணவர்கள் தற்போது நாட்டின் இராணுவத்தைத் தம் பக்கம் திருப்புவதற்கும் முயன்று வருகின்றனர்.

இந்தோனேசியப் படையினரின் கடமை இந்தோனேசியத் தலைவர்களைப் பாதுகாப்பது மட்டுமல்ல. மக்களைப் பாதுகாப்பதும் அவர்களது கடமை என்று அவர்கள் கூறி வருகின்றனர்

தலைநகர் தவிர நாட்டின் வேறு பல இடங்களிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். (ஐ-6)



ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இந்தோனேசியப் பொலீஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மாணவர் ஒருவர் சக மாணவர்களால் பல்கலைக்கழகத்துக்குள் கொண்டு செல்லப்படுகிறார். (படம்: ஏ.பி.)

உலக அரங்கில்

# கிளின்ரனின் விஜயம் ரத்துச் செய்யப்படும்?

வாஷிங்டன், மே 14

இந்தியா அணு வெடிப்புச் சோதனைகளை நடத்தியிருப்பதை அடுத்து எழுந்துள்ள சர்வதேச கண்டனச் சூழ்நிலையில் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இவ்வாண்டு இறுதியில் புதுடில்லிக்கு மேற்கொள்ளவிருந்த உத்தியோக பூர்வ விஜயம் ரத்துச் செய்யப்படலாம் என்று வாஷிங்டனில் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# அமெரிக்கத் தூதர் திருப்பி அழைப்பு

வாஷிங்டன், மே 14(சீ.என்.என்)

மூன்று அணுச்சோதனைகளை கடந்த திங்களன்று இந்தியா நடத்தியதை அடுத்து புதுடில்லியில் உள்ள தனது தூதரை அமெரிக்கா திருப்பி அழைத்துள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை தொடர்பாக ஆலோசனைகளை நடத்துவதற்காகவே அவர் வாஷிங்டனுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

றிச்சார்ட் செலஸ்ரி (Richard Celaste) என்ற அந்த ராஜதந்திரி புதுடில்லியில் இருந்து வாஷிங்டன் விரைந்துள்ளார். (ஐ)

### கடைசி நிமிடம் வரை இந்தியா ரகசியம் காத்தது

# அணுசோதனையை முன்கூட்டியே துப்பறிய சீ. ஐ. ஏ. தவறிவிட்டது!

வாஷிங்டன், மே 14

இந்தியா அணுவெடிப்புப் பரிசோதனையை நடத்தப்போகிறது என்ற தகவலை சரியான தருணத்தில் முன்கூட்டியே அறிந்துகொள்ள அமெரிக்காவின் சீ ஐ.ஏ.உளவு அமைப்பு (Central Intelligence Agency) தவறிவிட்டது.

இந்தியா அணுசோதனை நடத்தப் போகின்றது என்ற விடயத்தை சீ. ஐ. ஏ. கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை என்று வாஷிங்டன் தகவல்கள் கூறுகின்றன.

விண்ணில் இருந்து சதா கண்காணித்து வரும் அமெரிக்காவின் உளவு செய்மதிகளால் கூட இதனைக் கண்டறிய முடியாமற் போய் விட்டதாக கிளின்ரன் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது அமெரிக்க உளவுத்துறைக்குக் கிடைத்த மிகப்பெரிய அடி என்றும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்தச் சோதனை தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகள், பிரதமர் மற்றும் 4 மத்திய அமைச்சர்கள் ஆகியோருக்கு மட்டுமே தெரிந்திருந்தன, அந்தளவுக்கு இது விடயத்தில் இரகசியம் பேணப்பட்டிருக்கிறது.

இச்சோதனையில் இந்தியப் பாதுகாப்புத் துறை ஆலோசகராக இருந்த விஞ்ஞானி கலாநிதி அப்துல்கலாம், அணுசக்தித்துறைத் தலைவர் சிதம்பரம் ஆகியோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# இந்தியா வெற்றிகரமாக ஏவுகணைச் சோதனை

புதுடில்லி, மே 14

நிலத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இலக்கு நோக்கிப் பாயவும் —

தரையிலிருந்து வான் நோக்கிப்பாயவும் - திறன் கொண்ட குறைந்த தொலைவு ''திரிசூல்'' ஏவுகணை கடந்த திங்களன்று இந்தியாவால் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

ஒரிஸா மாநிலம், சண்டிலூர் சோதனை நிலையத்திலிருந்து அது ஏவப்பட்டதாகப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியமைப்பு உருவாக்கியுள்ள 5 ஏவுகணைகளில் திரிசூலும் ஒன்றாகும். (இ-8)

### அணுச்சோதனை குறித்து

# கருணாநிதி, ஜெயலலிதா மகிழ்ச்சிப் பெருமிதம்

சென்னை, மே 14

இந்தியா நடத்திய அணு வெடிப்புப் பரிசோதனைகளை தமிழக முதல்வர் மு. கருணாநிதியும், அ.தி.மு.க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவும் பெருமிதத்துடன் வரவேற்றுள்ளனர்.

இது மிகப்பெரிய வரலாற்றுச் சாதனை. இந்தச் சாதனைக்குக் காரணமான விஞ்ஞானிகள், நிபுணர்களை வியந்து பாராட்டுகிறேன்.— என்று கருணாநிதி கூறினார்.

அணுசக்தித் தொழில் நுட்பத்தில் இந்திய விஞ்ஞானிகள் உலகில் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பது இதன் மூலம் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதாக ஜெயலலிதா தெரிவித்தார்.

# நிலைமையை பாதுகாப்பு சபை ஆய்வு

நியூயோர்க், மே 14

இந்தியா நடத்திய அணு ஆயுத சோதனை தொடர்பாக எழுந்துள்ள சூழ்நிலையை ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் கூடி ஆராய்ந்துள்ளன. எனினும் தீர்மானம் எதுவும் உடனடியாக எடுக்கப்படவில்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ள ஐந்து நாடுகளான அமெரிக்கா பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, சீனா ஆகிய 5 நாடுகளும், அணு ஆயுதங்களை தம்வசம் வைத்துள்ள நாடுகளாகும்.

சுவீடனால் தயாரிக்கப்பட்ட வரைபு அறிக்கை ஒன்றை பாதுகாப்புச் சபை விவாதித்ததாக ஐ. நாவுக்கான அமெரிக்கத்தூதர் பில்றிச்சர்ட்ஸன் தெரிவித்தார்.

நாளை மறுதினம் பேர்மிங்ஹாமில் ஆரம்பமாகவுள்ள 'ஜீ-8' நாடுகளின் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இந்த விவகாரமும் இணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரஷ்யா கருத்து

அணு ஆயுத சோதனை நடத்தியதற்காக இந்தியா மீது விதிக்கப்படும் சர்வதேச ரீதியான கட்டுப்பாடுகள் பயனற்றவை, எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடியவை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான தடைகளுக்கு மொஸ்கோ ஆதரவளிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று ரஷ்ய வெளி விவகார அமைச்சர் பிரிமாகோவ் தெரிவித்துள்ளார்.

### இந்தியா பரிசோதித்தது

# ஜப்பான் மீது வீசிய குண்டைவிடப் பெரியது!

வாஷிங்டன், (சீ. என். என்.)

கடந்த திங்களன்று இந்தியா நடத்திய நிலத்தடி பரிசோதனையின் போது சோதனை செய்யப்பட்ட அணு வெடிப்புகள் ஹீரோசிமா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட அணுவின் அளவை விடப் பெரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஹீரோசிமா, நாகசாக்கி ஆகிய நகரங்கள் மீது 1945 ஆம் ஆண்டு அமெரிக்கா அணு குண்டுகளை வீசியது.

சுமார் 70 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்ட அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்த நாகசாக்கி நகர மேயர் இந்தியாவின் அணுசோதனை குறித்து ஜப்பான் தனது கண்டனத்தை இந்தியத் தூதரகத்திடம் தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார். (ஐ)

# கறுப்பின அழகியே தெரிவு!

ஹொனொலுலூ, மே 14 (சீ. என். என்.)

ரினிடாட் — ருபாக்கோ நாட்டைச் சேர்ந்த 25 வயதான சட்டத்துறை மாணவி வென்டி பிட்ஸ் வில்லியம் உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் ஒரு கறுப்பு இன அழகியாவார்.



செவ்வாய்க்கிழமை நடந்த தெரிவுப் போட்டியில்வென்றதன் மூலம் உலக அழகி என்ற பெருமை மட்டுமன்றி 2 லட்சம் டொலர்கள் பணப்பரிசையும் இவர் தட்டிச் சென்றுள்ளார்.

வெனிசுலா கால்வாயில் உள்ள சிறிய இரு தீவுகளான ரினிடாட்டும் ருபாக்கோவும் இணைந்த நாடே ரினிடாட் —ருபாக்கோ ஆகும்.

இந்த அழகிப் போட்டியில் இரண்டாம் இடத்தை வெனிசுலா அழகி வெருஸ்காராமிர்சும் (வயது 18), மூன்றாவது இடத்தை போட்டோறிக்கோ நாட்டைச் சேர்ந்த ஜோய்ஸ் கிறாட்டும் (23 வயது) வென்றனர்.

இருபது லட்சம் பார்வையாளர்கள் மத்தியில் மொத்தம் 75 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் போட்டித் தெரிவில் தோன்றினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் புதிய பாஸ் வழங்கும் பணி

வடமராட்சி, மே 14

வடமராட்சிப் பிரதேசத்தில் பத்து வயதுக்கு மேற்பட்டோருக்கு வழங்கப்பட்ட இராணுவ ''பாஸ்கள்'' (பிறிகேட் பாஸ்) புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக, அருகிலுள்ள இராணுவ முகாம்களில் வைத்து பாஸ் புதுப்பித்து வழங்கப்பட்டுவருகின்றது.

அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர் முன்னிலையில் இப்பணி நடைபெற்று வருகிறது. (ஐ-173)

**பருத்தித்துறையில்**

# டிப்போ ஊழியர் இரவில் தங்க விடுதி இல்லை

வடமராட்சி, மே 41

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவில் இரவு வேளைகளில் ஊழியர்கள் தங்குவதற்கு போதிய வசதிகள் இல்லை.

இரவு வேளைகளில் கடமையை முடித்த மற்றும், அதிகாலை வேளையில் கடமைக்குச் செல்லவுள்ள ஊழியர்களுக்கு தங்குமிட வசதியின்மையால் அவர்கள் டிப்போ வளவுக்குள் கண்ட கண்ட இடங்களில் தமது இராப்பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே இருந்து வந்த ஊழியர் விடுதியின் ஒரு பகுதியில் மின்சார ஜெனரேட்டர் பொருத்தப்பட்டுள்ளது. மற்றைய பகுதி சேதமடைந்துள்ளது. (ஐ-173)

# தீவகத்தில் மழை குறைவு

நெடுந்தீவு, மே 14

யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் சுமாரான மழை பெய்த போதும் தீவுப் பகுதியில் மழை மிகவும் குறைவாகவே பெய்துள்ளது. (ஐ-111)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சை

புதிய கிரிக்கெட் மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்காக யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள கிரிக்கெட் விதிகள் சம்பந்தமான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் நடத்திய வகுப்புக்களில் பங்கு பற்றாதவர்களும் இப்பரீட்சைக்கு தோற்றமுடியுமென சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பாடசாலைக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 14

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் கல்லூரிக்கு 58 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

மேற்படி வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ஐ-7)

UNDP / OPS / JAFFNA

**DRIVERS WANTED**

UNDP/OPS requires the services of two drivers who possess a valid Sri Lankan driving license and have a minimum of 5 years experience as a driver with a recognized institution. He or she must be fluent in English and has a fair knowledge of Sinhala.

Candidates will be given a trial and only expert drivers need apply.

Please forward your application to

UNDP/OPS,

123/1, Temple Road, Jaffna

with the names of two referees before the 22nd of May 98 (55991)

## கண்ணீர் அஞ்சலி

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியின் பதிவாளர் வைத்திய கலாநிதி திருமதி க. பரமசிவத்தின் தந்தையார்

**சங்கர வேலுப்பிள்ளை**

10-5-98 இல் காலமானார். அன்னாருக்கு எமது கண்ணீர்அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்
லங்கா சித்த ஆயுர்வேத
மருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(55990)

# பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ் கௌரவம் பெறக் காரணமானவர்

## பேராசிரியர் தில்லைநாதனுக்குப் பாராட்டு

வலிகாமம் தெற்கு, மே 14

1964 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை பேராதனைப் பல்கலைக்கழக சமூகத்தின் தமிழ்த்துறை பேராசிரியராக விளங்கி, பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ், தமிழ்த்துறை கண்ணியமாகவும் கௌரவமாகவும் விளங்கி வரக் காரணமாய் அமைந்தவர் தில்லைநாதன்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கலாகீர்த்தி சி. தில்லைநாதனின் மணிவிழா பாராட்டு நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தமது உரையில் கூறியதாவது —

கடந்த 50 ஆண்டுகளாக கண்டி வாழ் தமிழ் மக்களுக்கு தலைமைத்துவம் வகித்து வரும் அவர், தமிழறிஞர்களான விபுலானந்தர், கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், சதாசிவம். விக்கியானந்தன் வழிநின்று தமிழ்ப்பணி புரிகின்றார். கண்டி — யாழ். மக்களிடையே ஒரு தொடர்பாலமாகி சிங்கள மக்களுடன் இணைந்து கல்வித்துறை வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றி வருகிறார் என்றார்.

சுன்னாகம் — உடுவில் வாழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பாராட்டு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் தலைமை வகித்தார்.

முன்னதாக மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து விழா நாயகன் தம்பதிகள் மங்கள வாத்திய சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஆறு. திருமுருகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

''சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், அருள்திரு. எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

''ஆக்க இலக்கியமும் — தில்லைநாதனும்'' என்பது பற்றி சிறப்புரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் பின்வருமாறு கூறினார்.

நாடகத்துறையில் பிரபல்யம் பெற்ற கிங்ஸ்பெரி, கணபதிப்பிள்ளை போன்றோரின் வரலாற்றுப் பின்னணியில் நின்று தில்லைநாதன் செயற்படுவதால் தமது மாணவர்களுக்கும் நல்ல நாடகங்களை பழக்கி மேடையேற்ற வாய்ப்பாக உள்ளது இவரது நாடகங்களில் அனேகமானவற்றின் அடிநாதமாக அமைபவை சாதி அமைப்பு-வர்க்க பேதங்கள் பற்றிய பிரச்சினைகளே.

ஒரு காலத்தில் பேராசிரியர்கள் ஆக்க இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டு விளங்கினர். இன்று அது குறைந்து விட்டது தில்லைநாதனின் எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் மக்கள் மயப்பட்டவை. காதல் மற்றும் சமூக பிரச்சினைகளை இனங்கண்டு இவற்றைக் கவிதைகளிலும், நாடகங்களிலும் எடுத்துக்காட்டி நல்ல இலக்கியம் படைத்தவர் — எனக் கூறினார்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தமது பாராட்டுரையில் கூறியதாவது:

அடிமட்ட மக்களுடன் இணைந்து தமது இளமைக் காலத்தைக் கழித்த தில்லைநாதன் தமிழினத்தின் பண்பாட்டை, சிறப்பை, அதன் எழுச்சியை தன் வாழ்க்கை மூலமும், எழுத்துக்கள் மூலமும் உலகிற்கு எடுத்துக் காட்டி வருகிறார். அறிஞர்களை நாம் விரைவில் மறந்து விடுவது எமது மரபாகி விட்டது. எமது மண்ணின் புகழை வெளிக்கொணர்பவர்களை நாம் பாராட்ட வேண்டும். தில்லைநாதன் தொடர்ந்தும் இன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கை, மக்களின் பிரச்சினைகள், துயரங்கள், துன்பங்களைப் பற்றி நிறைய எழுத வேண்டும் என்றார்.

''ஆராய்ச்சி நோக்கில் தில்லைநாதன்'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய கலாநிதி சபா. ஜெயராசா கூறியதாவது:-

ஆராய்ச்சிக்கு மிக அவசியமானது அழுத்தம் திருத்தமான இறுக்கமாக அமைந்த மொழிநடையாகும். அருமையான மொழிநடையை ஆரம்பித்தவர் ஆறுமுக நாவலர். அவரைத் தொடர்ந்து விபுலானந்த சுவாமிகள் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வழிநின்று இன்று மொழிநடையைச் சிறப்பாக வளர்த்து வருகிறார் தில்லைநாதன் — என்றார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் இளைப்பாறிய உதவிச் செயலாளர் சி. பரமநாதன் தனதுபாராட்டுரையில்—

தமிழரின் அழியாத சொத்தாகிய கல்வி உயர்நிலை அடைய அடிஅத்திவாரமாக அமைவது பாலர் கல்வியாகும். உயர்கல்வி பற்றி சிந்திக்கும் நாம் பாலர் கல்வியிலும் அக்கறை கொள்ள வேண்டும். சிறுவயதில் நாம் தரும் அறிவு தான் நிலைத்து நின்று உயர்கல்விக்கு அத்திவாரமாகிறது. இன்று பாலர்களுக்கு புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகமாக்கி பல விடயங்கள் மூளையில் திணிக்கப்படுகின்றன. பாலர்களுக்கு சுமையாக அமையும் இப்பரீட்சை அவசியமானது தானா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது என்றார்.

கலாநிதி க. குணராசா, கலாநிதி சி.மகேசன், உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம், வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் சி. சிவசரவணபவன் [சிற்பி], ஸ்கந்தா அதிபர் க. சிவாஜி, இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஐ. மனோகரன், பேராசிரியர் வை. நந்தகுமார் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தோர் விழாநாயகனுக்கு பொன்னாடைகள், மோதிரங்கள், பதக்கங்கள், மாலைகள் அணிந்து கௌரவித்தனர்.

கலாகீர்த்தி சி. தில்லைநாதன் தனக்களிக்கப்பட்ட கௌரவத்துக்கு நன்றி தெரிவித்தார்.

மாணவர்களின் நடனம், புல்லாங்குழல் இசை ஆகியனவும் நடைபெற்றன. (ஐ-152-27)

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மலர்வு
27-08-1925

உதிர்வு
25-04-1998

திருமதி

**துரைசாமி இராசமணி**

(இளைப்பாறிய ஆசிரியை)

மன்னரேயேனும் மற்றை மக்களேயேனும் பின்னைப் பன்னுபல்லுயிர்கள் தாமும் பாரினில் உதித்தால் ஈற்றில் தன்னுடல் நீத்தலுண்மை தானுமவ் வழியே சென்றால் இன்னலுற்றிரங்கல் ஏனோ இளமையே அறமேற் கொள்வீர்!

எமது குலவிளக்கின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு மலர் வளையம் சாத்தியும் அனுதாபச் செய்தி அனுப்பியும், பிற உதவிகள் வழங்கியும் உதவிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

நாளை 15-05-98 நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி' சாந்தி! சாந்தி!

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(55956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் ஆங்கில விருத்தித் திட்டத்துக்கு பிரிட்டன் 12 கோடி ரூபா உதவி

கொழும்பு, மே 14

இலங்கையில் ஆங்கில மொழிக் கல்வித் திட்டத்தை அமுல் செய்வதற்காக பிரிட்டன் 12 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

நாடு முழுவதுமுள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழியறிவை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்காக பிராந்திய மட்டத்தில் ஆங்கிலப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

போதனாசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் இந்த நிலையங்களுக்குத் தேவையான கருவிகள், புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வி உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டம் 2 ஆயிரத்து முதலாம் ஆண்டு வரை நீடிக்கும். (ஐ-6)

## இந்து இளைஞர் மன்ற கொடித்தினம் ஆரம்பம்

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தக் கொடித்தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் பேரவைத் தலைவர் வே. கெ. தனபாலன் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் கலாமண்டபத்தில் நடைபெறும்.

ஆதீன முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் முதல் கொடியைப் பெற்று கொடித்தினத்தை ஆரம்பித்து வைப்பார்.

இந் நிகழ்வில் சகல சமய நிறுவனங்கள், பாடசாலை இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (ஐ-30)

## கிராமிய ஆஸ்பத்திரிக்கு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், மே 14

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த செம்பியன்பற்று, மாமுனை, நெல்லியான் பகுதி மக்கள் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற மருதங்கேணிப் பாதுகாப்பு அரண் பகுதியில் உள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதுவரை காலமும் பொது மக்கள் வயதுக்கட்டுப்பாட்டு அடிப்படையிலேயே மருதங்கேணிப் பாதுகாப்பு அரண் பகுதி ஊடாக உள்நுழைவதற்கு படையினர் அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-36-7)

## வாய்க்கால்கள் திருத்தப்படுகின்றன

கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள வாய்க்கால்களைத் திருத்தும் பணியை நல்லூர் பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

3 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாது இருந்த வாய்க்கால்களே தற்போது திருத்தப்பட்டு வருகின்றன. (இ-7)

## விடுதி வசதி

யாழ்ப்பாணம், மே 14

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் குறுகிய காலப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர்களின் வசதி கருதி விடுதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்த கால வன்செயல்களின் போது பயிற்சிப் பாடசாலையின் விடுதி பலத்த சேதமடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

விடுதியைத் திருத்தி அமைப்பதற்கான நிதி உதவியை யு. என். டி. பி அமைப்பு வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கண்ட கண்ட இடங்களில் விற்பனையாகிறது கள்!

உரும்பிராய், மே 14

ஆள்களைக் கூவியழைத்துக் கள் விற்பனை செய்யப்படுவதனால் வீதியில் பயணம் செய்வோர் பாதிக்கப்படுகின்றனர்.

உரும்பிராய் கோப்பாய் வீதியில் இராசபாதைச் சந்திக்கு இரு புறமும் இது ஒரு நாளாந்த நிகழ்வாக நடக்கிறது.

வீதியோரங்களில் கொள்கலன்களில் கள்ளுடன் காணப்படும் இவர்கள் போவோர் வருவோரைக் கையைக் காட்டி மறித்து கள் வேண்டுமா? என்று கேட்டுத் தொந்தரவு செய்கின்றனர்.

இந்த இடத்தில் சுமார் 30 யார் தூரத்தில் இராசபாதையில் ஒரு கள்ளுத்தவறணை உள்ளது.

குடாநாட்டில் பல இடங்களிலும் இப்போது கண்ட கண்ட இடங்களில் கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ஐ-154)

## மருதனார்மடம் சந்தையில் அடிக்கடி திருட்டுகள்

வலிகாமம் தெற்கு, மே 14

மருதனார்மடம் சந்தைப் பகுதியி சைக்கிள் களவு அதிகரித்துள்ளது. கடந்த வாரம் மரக்கறிக் கொள்வனவுக்காக வந்த வர்த்தகர் ஒருவரின் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பிரிவில் சைக்கிளை வைத்து பூட்டிய மானிப்பாய் வர்த்தகர் ஒருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது.

கடந்த வாரம் சைக்கிளை திருட முயன்ற திருடனை பொதுமக்கள் மடக்கி பிடித்ததும் அதற்குமுன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் களவாடப்பட்டது தெரிந்ததையே.

சந்தைக்கு கொள்வனவு - விற்பனவுக்கு வருவோர் சாதாரண பூட்டுடன் மேலதிகமாக சங்கிலிப் பூட்டையும் பாவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-152)

# நெடுந்தீவு அபிவிருத்திக்கு ரூ. 55 லட்சம் ஒதுக்கீடு

நெடுந்தீவு, மே 14

நெடுந்தீவுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு 55 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பிரதேச சபைக்கு 35 லட்சம் ரூபாவும் மிகுதி ரூபா20லட்சம்மரமுந்திரிகை, தேக்கு போன்ற மரங்கள் நடுகைக்கும், பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், நெழுவினி பிள்ளையார் கோயில்ஆகியவற்றின் பணிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் அடுத்து வரும் ஐந்து மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-111)

## மதகு திருத்தம்

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள மதகு திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த மதகு கடந்தகாலங்களில் விமானத் தாக்குதலினால் சேதமடைந்திருந்தது.

மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதி தற்போது போக்குவரத்துக்கு தடைப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி பின் வீதியே போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. (ஐ-139)

# வேலணை பிரதேச சபை: ஆளணிப் பற்றாக்குறை

வேலணை பிரதேச சபையின் கீழ் இயங்கும் உப அலுவலகங்களை ஆளணி பற்றாக்குறையினால் இயக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 63 ஆகும். இதில் தற்பொழுது 29 பேர் மட்டுமே கடமைபுரிகின்றனர்.

இலங்கை நிர்வாகசேவைப் பதவி, எழுதுவினைஞர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகர் உட்பட 34வெற்றிடங்கள் நிரப்பப் படாமலுள்ளன.

இடப்பெயர்வின் போது சபைக்குரிய தளபாடங்கள் உபகரணங்கள்யாவும் காணாமற்போய்விட்டன. இவற்றை மீளவும் கொள்வனவு செய்வதற்கு வருமானம் எதுவுமில்லாமல் இருக்கிறது.

கடந்த 5 வருடங்களாக பிரதேச சபை எல்லைக்குள் வரிகள் எதுவும் அறவிடப்படவில்லை. தற்பொழுது மீளக்குடியமர்வு நடைபெற்றாலும் சோலைவரி அறவிட முடியாதுள்ளது.

சபையின் முக்கிய சேவைகளான நூலக சேவை, நீர் விநியோகம்,சுகாதாரசேவைகளை நடைமுறைப் படுத்துவதிலும் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நூலக சேவையை ஆரம்பிப்பதற்கு புத்தகங்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது. அல்லைப்பிட்டி, மண்டைதீவு,புங்குடுதீவு உப அலுவலகங்களில் நூலக சேவை புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## உலர் உணவு

கொழும்புத்துறை, மே 14

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளூடாக 61 ஆவது ஏ. பீ. உலர்உணவு முத்திரை புள்ளிகளுக்கு தற்போது அரிசி, சீனி, பருப்பு, நெஸ்பிறே ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-30)

## ஆங்கிலப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 14

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய மொழிப் பயிற்சித்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி நெறி ஒன்றை நடத்தி வருகின்றது.

இலவசமாக இடம்பெற்று வரும் இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கு பயிற்சி இறுதியில் பரீட்சை நடத்தப்பட்டு தேசிய ரீதியான சான்றிதழ் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-7]

## சிரமதானம்

கொழும்புத்துறை, மே 14

சரசாலை - நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் ஆலயப் பரிபாலன சபையும், சரசாலை இந்து மன்றமும், பொதுமக்களும் கூட்டாக இணைந்து எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட உள்ளன. (ஐ-30)

## பெண்ணுக்கு தீக்காயம்

நெல்லியடி, மே 14

குசினியில் சமையல் செய்து கொண்டிருந்த பெண்ணின் ஆடையில் தீ பற்றியதால் அவர் படுகாயம் அடைந்து மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கரவெட்டி மேற்கைச்சேர்ந்த சேதுலிங்கம் பரிபூரணம் (42 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார். (இ-109)


வடமராட்சி உடல் ஊனமுற்றோர் சங்கம்

நிர்வாக புனரமைப்புப் பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்

இடம்: சதாப் பொன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய் கிழக்கு, அல்வாய்,

காலம்: 17 - 05 - 98 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.30 மணி (பழைய நேரம்)

சகல அங்கத்தவர்களும் வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ச. சின்னத்தம்பி
செயலாளர்

விளம்பர உதவி:-
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(55984)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 — 03 — 1926

மறைவு 25 — 04 — 1997

திருமதி
செல்வராணி சுப்பிரமணியம்

திதி: 14 - 05 - 1998

எங்கள் குடும்ப விளக்காகத் திகழ்ந்த
அன்புத் தெய்வமே.......
தாங்கள் எங்களை மீளாத் துயரிலாழ்த்திப் பிரிந்து
ஆண்டு ஒன்று கழிந்ததுவோ.........
உங்கள் அன்பு முகமும்
அரவணைக்கும் பண்பாடும்
எங்கள் நெஞ்சில்
என்றும் நிழலாடும்.
உங்கள் பாசம் படிந்த......

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(55938)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 55, செட்டித் தெரு, நல்லூர். [55963]

5000 ஓடுகள், தீராந்திகள, நிலைகள், கதவுகள், யன்னல்களைக் கொண்ட வீடு முழுமையாக விற்பனைக்கு உண்டு. ரூபா 1,75,000. தொடர்பு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை (மாலை 2–5 மணிவரை.) [55985]

### ஆங்கிலக்கலவி

பத்து மாணவர்களை மட்டும் ஒரு வகுப்பில் சேர்த்து தனித்தனி கவனம் கொடுத்து ஆங்கிலம் பேசுவதில் சிறந்த மாணவர்களை உருவாக்குகிறோம். ஆசிரியர்:– ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, ஆங்கிலக்கல்வி நிலையம், 426, (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (55958)

### தேவை

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக வசிக்கும் சுவாமியம்மா என்பவரோடு சேர்ந்து வசிக்கக்கூடிய மணமாகாத பெண்கள், அநாதைகள், ஆத்மீகப் பற்றுள்ள பெண்கள் தேவை. தொடர்பு: சுவாமியம்மா (விமலா) 'திருப்பதி இல்லம்' பெரியபுலம், தெல்லிப்பளை கிழக்கு. [55962]

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நட்சத்திரம் அச்சுவினி 2 ஆம் பாதம் உதயத்தில் செவ்வாய் A/L படித்த லண்டனில் Book Keeping படித்து வேலை பார்க்கும் மணமகளுக்கு லண்டனில் மணமகன் தேவை. தொடர்பு: இல, 734, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [55964]

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல கடிகாரவகை, எலக்ரோணிபிணாஷ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச்சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி), 301, கன்னாதிட்டிச் சந்திக்கு சமீபம். [56953]


## இலவச பண்டித வகுப்பு

கொழும்புத்துறை, மே 14 கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் பிரதி சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணி வரை இலவச பால பண்டித வகுப்புகள் தலைவர் பிரம்மஸ்ரீ எஸ். நமசிவாயக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றன. (ஐ–30)

## சிறுவனை பாம்பு கடித்தது

யாழ்ப்பாணம், மே 14 வீட்டு முற்றத்தில் நின்ற சிறுவனை பாம்பு கடித்தது. உரும்பிராய் கிழக்கில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேலாயுதம் பிரணவநந்தன் [வயது 12] என்பவரே பாம்பினால் கடியுண்டவர் ஆவார். யாழ். ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ–15)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 – 08 – 1942

உதிர்வு 06 – 05 – 1996

உயர் சைவத்திரு.

**பொன்னர் வெற்றிவேலாயுதம் (விஜயன்)**

(வெளிக்கள உத்தியோகத்தர், உணவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

ஆண்டுத் திவசம்: 14 - 05 - 1998

அறங் கிடந்த நெஞ்சும், அருள் ஒழுகும் கண்ணுங் கொண்ட உங்கள் ஆத்மா இறைவனடி சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கும் இதயங்கள்:

பாசமிகு மனைவி திருமதி வெ. காந்திமதி, பிள்ளைகள்: சாரதா, சுகர்சன், சுகர்சினி, சயந்தன், சுகந்தினி, மைத்துனமார்: ச. கதிரவேலு (பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), ச. கணேசன் (செயலாளர் திருகோணமலை நகராட்சி மன்றம்), திருமதி நா. இராசமணி, ச. சிவபாலன் (ஜேர்மனி) ஆகியோர்.

இன்று 14—05—1998 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் நடைபெறும் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் உற்றார், உறவினர். நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தங்கள் பிரிவால் கண்ணீர்ப் பூக்கள் சொரியும்:

மனைவி, பிள்ளைகள்.

''விஜயபவான்''
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(சி/3722)

## இறைவன் மாட்சியில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம் 02 – 01 – 1930

விண்ணகம் 14 – 05 – 1997

அமரர்

**F. அன்ரன் முத்துராஜா**

(சுண்டுக்குளி யாழ்ப்பாணம்)

14 - 05 - 98

இழப்புகள் தினம் தாங்கி
விடுதலை தேடும் மண்ணில்
எம் பிரிவினை தினமும் எண்ணி
ரணத்துடன் வாழ்ந்த நெஞ்சம்
எம் நல் வாழ்வினை எண்ணி
பல எண்ணங்கள் கொண்ட உள்ளம்
நாம் கண் காண முடியாத உலகிற்கு
விரைந்து தான் சென்றதேனோ!
உன் விதைகள் இங்கு மரமாகி
விருட்சமாகி வருகையிலே
அருவமாகி மறைந்ததேனோ
அவங்கள் நாம் செய்தோமா
தவங்கள் செய்ய மறந்தோமா
உன் பிரிவில் நாம் ஊமைகள் ஆனோம்
உள்ளத்தால் அழுகின்றோம்.
ஊருக்கும் தெரியாது உலகிற்கும் தெரியாது
வார்த்தைக்குள் அடங்காத சோகம்
உங்கள் பிரிவு தந்த துயரம்
எம் வாழ்விற்குள் அழியாத நினைவு முகம்
நல் தந்தையே உம் அன்பு முகம்
அடைக்கலமானீர் இறைவனிடம்
அவனடி தொழுகின்றோம் நாளும்
நாம் உமக்காய் தந்தையே!

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
மு. எடின்பரோ (மகன்)
38/4, பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம். (55914)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்து விட்டது!

A/L, G. A. Q., அளவையியல், மெய்யியல் மாணவர்களுக்கு

''வென்படவரை முறை ஓர் அறிமுகம்''

வெளியீடு:

**மெய்யியற் கல்வி அகம்**

46/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. (55956)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 24 – 11 – 1942

மறைவு 14 – 04 – 1998

அமரர்

**சின்னையா நவரத்தினம்**

(Composistor, Mahathma Press)

எம் குடும்பத் தலைவரே! எங்களை விட்டுச்சென்று மாதம் ஒன்றாகினாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

மற்றும் அன்னாருக்கு பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(55976)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**செல்வராசா டொணால்ட் சிறீகரன்**

(வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்.)

தோற்றம் 1977 — 04 — 24

மறைவு 1997 — 05 — 14

அன்புத் திருமகனே
அருமை மகன் பாலா
ஓராண்டு ஓடி மறைந்திடினும் எம்மகனே
நீங்காது உம் நினைவு எம்மனதால் என்றென்றும்
பொய்யான வாழ்விதென்று நீர் உணர்ந்த காரணத்தால்

மெய்யான வாழ்வுபெற விண்ணகம் சென்றீரோ!
பாவமறியாப் பாலகன் நீர் பாலகனே மைந்தா
பரமனின் பாதமண்டை என்றென்றும் நிலைத்திடுவீர்!

அன்புடன் நினைவு கூரும்:

தந்தை: செல்வராசா,
தாய்: கிருபைவரம்,
அண்ணன்: கிருபாகரன் குடும்பம்,
அக்கா: பிரீதினி குடும்பம்,
அண்ணன்: செல்வாகரன் குடும்பம்,
மைத்துனி: ஜெயந்தின் குடும்பம்,
மாமி; அரியமலர் குடும்பம் (கனடா)

கா. செல்வராசா,
உசன்,
மிருசுவில்.

(55198)

# உதயன்

## பாவம், மக்களே!

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தரைவழிப் பாதை ஒன்றைத்திறந்தால், அதனால் பல அனுகூலங்கள் உள்ளன என்பது உண்மையே.

யாழ்ப்பாணத்தில் அரசாங்கப் படைகள் நிலைகொண்டுள்ளதாலும், இடையில் உள்ள வன்னிப் பிரதேசம் முழுவதிலும் விடுதலைப் புலிகள் பரந்து நிலைகொண்டுள்ளதாலும் பாதையைத் திறக்க இரண்டு வழிமுறைகள் இருந்தன.

ஒன்று பேச்சுவார்த்தை மூலம், சமாதான வழியில்— அமைதி வழியில் — திறப்பது. இரண்டாவது போர் மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி பாதையைத் திறப்பது.

போர்மூலம் பாதையைத் திறந்தாலும் அதனைத் தக்க வைப்பதும், பாதுகாப்பான போக்குவரத்துக்கு உறுதி செய்வதும் கஷ்டமானதாகவே இருக்கும் என்று இராணுவ விமர்சகர்கள் பலரும் எச்சரித்திருந்தனர்.

ஆனால், அரச தரப்பு தனது பலத்தை அளவுக்கு அதிகமாக மதிப்பிட்டு போர் வழியையே தெரிவு செய்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது போல, வன்னிப் பிரதேசத்திலும் வெற்றி கண்டு விடலாம் என்ற வீறாப்புடன் பிரதான தரைப்பாதையைத் திறக்கப் போரைத் தொடககியது.

காட்டுக்குள்ளே நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகளைச் சமருக்கு இழுத்து அவர்களைக் கொன்று, அவர்களின் படைபலத்தைப் பலவீனப்படுத்துவதும் அரசின் இரண்டாவது இலக்கு.

எப்படியும் தமக்கே வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், வவுனியா – கிளிநொச்சி பிரதான பாதையை–கண்டி வீதியை — திறக்கும் இராணுவ நடவடிக்கைக்கு ''வெற்றி உறுதி'' என்று பெயரிட்டு நாள், கோள் பார்த்து கடந்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி அதனை ஆரம்பித்தனர்.

செவ்வாய்க்கிழமை ஒரு வருடம் கடந்து, நேற்று இரண்டாவது ஆண்டு பிறந்து விட்டது. படையை விட்டுப் பதினையாயிரம் பேர் தப்பி ஓடி விட்டனர்; அவ்வாறு நடக்காதிருந்தால் நாம் பாதையைப் பிடித்திருப்போம் என்று கணக்குப் பார்க்கும் நிலையில் இப்போது அரசு.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அட்டவணைகள், அவகாசங்கள் பல விதித்திருப்பினும் நினைத்தது நடக்கவில்லை; திட்டமிட்டதில் வெற்றி இல்லை,

இந்த ஒரு வருடத்தில் மக்களுக்கும், நாட்டுக்கும், அரசாங்கத்திற்கும் உண்டான இழப்புகள் அனந்தம், நினைத்ததை எய்த முடியாமற்போனது பெரும் பின்னடைவு.

இந்த இரண்டு அம்சங்களையும் முன்வைத்தாவது, அரசு போரை நிறுத்தி சமாதான வழியை நாடியிருக்கலாம். நாட்டு—மக்கள்— நன்மையைக் கருதியிருந்தால் அவ்வாறே செய்திருக்கும்.

ஆனால் இப்போதும் போர் வழியையே தெரிவு செய்திருக்கிறது அரசு. கெடுகுடி சொற்கேளாது என்பர் மக்கள் தான் பாவம்!

# ஆசிரிய சேவையின் குறைபாடுகளும் சம்பள மீளாய்வின் முரண்பாடுகளும்

நித்தியானந்தன் சவரிமுத்து
வைரமுத்து சிறிஸ்கந்தராஜா

ஒரு நாட்டின் மனித வளத்தினை ஒழுங்கு படுத்திச் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆசிரியர்களாவர். இதனால் சமூகத்தில் ஆசிரியர்கள் உயர்ந்த இடத்தில் மதிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆசிரியர்களின் சம்பளம் உயர்ந்த நிலையிலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் ஆசிரியர்களின் சம்பளம் ஏனைய ஊழியர்களின் சம்பளங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த தரத்திலேயே உள்ளது. முன்னைய ஆட்சியின் போது ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்த நடவடிக்கை எடுத்த போதும்அவற்றினை அமுல் நடத்த முடியாது போய் விட்டது,

ஆசிரியர்களின் சேவையைக் கௌரவிக்கவும், சமூகத்தில் சிறந்த இடத்தினை வழங்கவும் ஊக்குவிக்கும் நோக்கமாகக் கொண்டு கல்விஅமைச்சர் 06 - 10–1994 முதல் இலங்கை ஆசிரியர் சேவையை அறிமுகப்படுத்தினார். இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டதன் விளைவாக ஆசிரியர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம், இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டதன் மூலம் ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதாகும். இலங்கை ஆசிரியர் சேவையின் அடிப்படையில் ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதையஆசிரியர் ஆள் திரட்டல் திட்டத்தின் படி ஒருவர் ஆசிரியராக நியமனம் பெறுவதற்கான மிகக் குறைந்த கல்வித் தராதரம் க. பொ. த (உ/த) சித்தியாகும். இதன் அடிப்படையில் ஒருமாணவன் க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேற்றைப்பெறும் வயது 22ஆகும். ஆசிரியர்கள் தெரிவுக்கான போட்டிப்பரீட்சை வருடாந்தம் நடத்தப்பட்டு அதில் சித்தியெய்தி நியமனம் பெற்றால் வயது 23 ஆக அமையும். இந்த ஆசிரியர் இலங்கை ஆசிரியர் சேவையில் வகுப்பு 3 தரம் 11 இல் முதல் நியமனத்தைப் பெறுவார். இவர் உரிய பயிற்சியைப் பெற்று சேவையின் பத்தாவது வருடத்தில் வகுப்பு3 தரம் 1 இல் சேர்க்கப்படுவார். இந்நிலையில்இவரின் வயது 33ஆகும்.

### குதிரைக்கு முன்கொள்ளு

வகுப்பு 3 தரம்1 இல் பத்து வருட சேவையின் பின் வகுப்பு 2 தரம் 11 இலும் இத்தரத்தில் பத்துவருட சேவையின் பின்னர் வகுப்பு 2 தரம் 1 இலும் சேர்க்கப்படுவார். இதன்படி ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் வகுப்பு 2 தரம் 11 இன் உச்ச நிலையை அடையும் போது அவரது வயது 53 ஆகும். இந்த இடைக் காலத்தில் அந்த ஆசிரியர் 600 மணி நேர சேவைக்கால பயிற்சியையும் சேவை மீளாய்வு பயிற்சியையும் பெற வேண்டும். இதன் பின் உடனடியாக வகுப்பு 2 தரம் 1–க்கு மாற்றப்பட்டாலும் அதில் உள்ள 7 சம்பளப்படி நிலைகளைப்பெறும் போது வயது 55 இனைத் தாண்டி விடும் என்பதால் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர், ஆசிரியர் சேவை தரம் 1ஐ அடைவது குதிரைக்கு முன் கொள்ளு கட்டுவது போலாகி விடும்.

பட்டதாரி ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் ஒருவர் பட்டதாரிப் பட்டத்தினைப் பெறும் வயது 27 ஆகும். பட்டத்தினைப் பெற்றவுடன் நியமனம் கிடைக்கும் என்பது சந்தேகமே.

எனவே 30 வயதில் பட்டதாரி ஆசிரியர்நியமனம் பெற்றால் அவர் ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் 1 இல் சேர்க்கப்படுவார். இதன்படி3:1இல் 5வருடங்களும் 2:11 இல் 10 வருடங்களும் 2:1 இல்7 வருடங்களையும் பூர்த்தி செய்து 2:1 இன் உச்ச நிலையை அடையும் போது அவரது வயது 52 ஆகஅமையும். உடனடியாக பரீட்சையில்சித்தியெய்தி தரம் 1 இல் சேர்க்கப்பட்டாலும் ஓய்வு பெறமுன் அந்தந் தரத்தில் உள்ள 10 சம்பளப் படிநிலைகளை அடைய முடியாது. எனினும் இடையில் நடைபெறும் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறும் ஆசிரியர்கள் இந்த உயர் நிலையை அடைய முடியும். ஆனால் அந்த இடைக்காலத்தில் 450 மணிநேர சேவைக்கால பயிற்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

### சம்பள மீளாய்வு

01–01–1997 முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பி.சி.பெரேராவின் சம்பள மீளாய்வானது, ஆசிரியர் சேவையினைக் கணக்கிலெடுக்காது ஆசிரியர் சேவையின் நோக்கங்களைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. குறிப்பிட்டுக் கூறுவதாயின் இலங்கையில் ஆசிரியர் சேவைஎன ஒன்று உள்ளதையும் அது உருவாக்கப்பட்டதன் நோக்கத்தையும் இவர் மறந்து விட்டார். அதாவது இவரது சம்பள மீளாய்வின் மூலம் ஆசிரியர் சேவைக்கு முன் வழங்கப்பட்டசம்பளத்துக்கு ஒத்த மாற்றீட்டுக்குக் குறைவான சம்பளமே வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவைக்கு முன்னர் தராதரப்பத்திரமற்ற ஆசிரியரின் சம்பளப் படி எஸ் –2-1 ஆசிரியர் சேவையின் படி வகுப்பு 3 தரம்11–க்கு மாற்றப்பட்ட போது சம்பளப்படி தொகுதி எஸ்-3–3,01. 01.1997 மீளாய்வின் பிரகாரம் சம்பளத் தொகுதி ரி–16–1 ஆக மாற்றப்பட்டுள்ளது. இச்சம்பளத் தொகுதியானது 2/ 97 இலக்க சுற்றிக்கையின்படி ரி–1-4 சம்பளத் தொகுதிக்குச் சமமானதாகும். இச்சம்பளத் தொதியானது சிற்றூழியர் தரம் 1–க்குரியதாகும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சம்பளம், ஆசிரியர் சேவைக்கு முன் சம்பளத் தொகுதி எஸ்–11–4 ஆசிரியர் சேவையின் பிரகாரம் பத்து வருட சேவைக்குப் பின்னர் எஸ்-5–1 சம்பளத் தொகுதியாக மாற்றப்பட்டுள்ளது. இச்சம்பளத் தொகுதியானது பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2/97 111 இன் பிரகாரம் ரி–11-4 சம்பளத் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத் திட்டத்திற்கும் குறைவானதாகும்.

ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டதன் நோக்கம் பி.சி. பெரேராவின் சம்பள மீளாய்வுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

### பயிற்றப்பட்ட ஆசிரியர் 01. 01. 1997 முன்

ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டதற்கு முன் உள்ள நிலையினைநோக்கினால்ஆரம்பத்தில் பயிற்றப்படாத ஆசிரியரின் சம்பளத் தொகுதி ரி– 2– 1 ஆகும். இது ரூ. 29, 400– 5X 600– 11 X 780–ரூ 41,280 பதினைந்து வருட சேவை அல்லது பயிற்சியின் சம்பளத் தொகுதி எஸ்– 11- 1 ஆகும். இதன் பிரகாரம்ரூ . 34,320– 6X 780- 8X 1200– ரூ 50,160.

01–10–1994 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரியர் சேவையின்படி முதல் நியமனம் 3: 11 இலும் இதற்குரிய சம்பளத் திட்டமானது ரூ 32520– 10 X 780- 2X 12000- 42720 பொது நிர்வாக சுற்றறிக்கை 2/ 97 படி இச் சம்பளத் திட்டம் ரூ 45900- 14X 1320– 6 X 1560- ரூ. 73740 ஆக மாற்றப்பட்ட போதும் 12 வருட சம்பளப் படியேற்றக் காலங்கள் 20 வருடங்களாக மாற்றப்பட்டுள்ளன ஆனால் முன்பு போல் ஆசிரியர் சேவையின்றி எஸ் –2 –1 சம்பளப் படிநிலையில் இருந்திருப்பின் சம்பளம் ரூ.47780- 14X 1320– 6X 1560– ரூ 75720 ஆக இருந்திருக்கும். பயிற்சி பெற்ற ஆசிரியரின் சம்பளத் திட்டம் ஆசிரியர் சேவையின் படி ரூ. 42720– 12X 1200- ரூ. 57120 இலிருந்து ரூபா 55140–9 X 1320 – 8 X 1560 – ரூபா 79500 ஆக மாறியுள்ளது. இங்கு வருடாந்த சம்பளப் படியேற்றக் காலங்கள் ஐந்து வருடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இச் சம்பளத் திட்டத்திலிருந்து 2:1 இற்கு மாறப்பட 10 வருட சேவையும் 300 மணித்தியால சேவைக்காலப் பயிற்சியும் அவசியமாகும். 2 : 11 இலிருந்து 2:1 க்குச் செல்ல 10 வருட சேவையும் 150 மணித்தியால சேவைக்காலப் பயிற்சியும் தேவைப்படுகிறது.

அ) 2,1 தரத்தின் சம்பளம் தற்போது ரூ. 90.420 — 7X 3000–ரூ, 1,14,420 ஆகும். இதற்குப் பயிற்சியின் பின் 20 வருட சேவை தேவை. ஆனால் ஆசிரியர் சேவையானது இல்லாமல் இருப்பின் பயிற்சி பெற்றவுடன் ஆசிரியர்கள் ரூ. 67320-10X 15,60 – 6X2460–ரூ. 97680 என்னும் சம்பளத்திட்டத்தில் நியமிக்கப்பட்டிருப்பின் இரண்டு உச்சத்துக்குமான வித்தியாசம் ஒரு சம்பளப் படி ஏற்றமே. ஆனால் இரண்டு சம்பளப்படிநிலை உச்சங்களையும் அடைவதற்கான பயிற்சியின் பின்பான கால வித்தியாசம் 11 வருடங்களாகும். அதாவது 11 மேலதிக வருடங்களின் பின்பே ரூ. 1,14,420 என்னும் படியை அடையலாம். ஆசிரியர் தரம் 2:1 உச்ச ஆரம்ப நிலையை அடைய ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர்55வயதை அடைந்து விடுவார். எனவே ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர், ஆசிரியர் தரம் 1-க்குச் செல்வது என்பது எட்டாக்கனியாகும்.

(வளரும்)

## சாயி சிந்தனை

டார்வின் என்ற விஞ்ஞானி சிறு வயதாக இருந்த சமயம், அவரது குரு ஹென்ஸ்லோ என்பவர் மிகவும் தூய எண்ணங்கள் கொண்டவர். ஒருநாள் டார்வின் சிந்தித்தார். நானும் என் குருவைப் போல உயர்ந்த நிலைக்கு உயர வேண்டும் என்று எண்ணினார். அந்த எண்ணம் துவங்கியதும் தன்குருவைப் பற்றியே சிந்தித்து அவரைப் போன்றே நடக்க ஆரம்பித்தார். படிப்படியாக டார்வினும் ஹென்ஸ்லோவும் ஒரே மாதிரியாகத் திகழ ஆரம்பித்தனர்,

யாரைப் பற்றி இடைவிடாது சிந்திக்கின்றோமோ, யாரைப் பார்த்து செயற்படுகிறோமோ அவ்வாறே மாறிவிடுகிறோம். அதனால்தான், நல்லதையே எண்ணி, நல்லதையே செய்து, நல்ல முறையிலே நடந்து கொள்ளும் போதே மனிதன் உண்மையான மனிதன் என அழைக்கப்படுகிறான்.

(ஆதாரம்: சனாதனசாரதி — செப்ரம்பர் - 1997, பக்கம் - 5)

## உதயவாக்கு

நீஉண்பது பசியை நீக்குவதற்குமட்டுமன்று; பசியாறுவதுடன் அந்த உணவினால் உடம்புக்கு வலிமையும், உள்ளத்துக்கு நற்பண்பும் உண்டாகவேண்டும்.

— நாவலர்

## விளையாட்டுப் போட்டி

நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் செ. செல்வநாயகம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

கோப்பாய்க் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## விவரம் சேகரிப்பு

வடமராட்சி கிழக்கு அம்பன் கமநல கேந்திர நிலையத்தின் அதிகாரப் பிரதேசத்தில் 1998— 99 காலபோக விவசாயச் செய்கைக்கு விதை நெல், விதை உருளைக் கிழங்கு போன்ற உள்ளீடுகள் தேவைப்படுவோரின் விவரம் அம்பன் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தரினால் சேகரிக்கப்படுகின்றன.

அத்துடன் விவசாயக் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை, நாலு சில்லு உழவு இயந்திரங்களின் எண்ணிக்கை, இரண்டு சில்லு உழவு இயந்திரஙகளின் எண்ணிக்கை. நீர் இறைக்கும் இயந்திரங்களின் எண்ணிக்கை, போன்ற விவரமும் சேகரிக்கப்படுகின்றது.

## நாளை

வைகாசி - 01
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தி
முற்பகல் 10. 47 வரை:
நட்சத்திரம்: மூலம்
பிற்பகல் 12.36 வரை
அமிர்தசித்தம்
சுபநேரம்: 05.53 –6.23
ராகுகாலம்: 10.27 –11.57
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள், திணைக்களங்களில்
# நிர்வாகக் கடமைகளில் உதவ
# சமுர்த்தி ஊழியர்கள் இணைப்பு

வடமராட்சி, மே 14

வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) சமுர்த்தி ஊழியர்கள் பலரும் நிர்வாக கடமைகளின் பொருட்டு அரச திணைக்களங்களிலும், அரச பாடசாலைகளிலும்இணைக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்ட14 சமுர்த்திமுகாமையாளர்களும் கோட்டக் கல்வி அலுவலகம். மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகம், பிரகான பாடசாலைகள், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு நிர்வாக உதவியாளர்களாகவும்.

105 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களில் 66 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் வடமராட்சி வடக்கிலுள்ள 33 பாட.சாலைகளுக்கு தலா 2 பேர் வீதம் நிர்வாகக் கடமைகளின் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திலேயே கடமையாற்றி வருகின்றனர்.

நிர்வாகக் கடமைகளுக்காக சமுர்த்தி ஊழியர்கள் பல்வேறு திணைக்களங்கள், பாடசாலைகள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்பட்டுள்ள போதிலும் இவர்களுக்கான கொடுப்பனவுகள் யாவும் பிரதேச செயலகத்திலேயே நடைபெற்று வருகின்றன. (ஐ-173)

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

நிகழும் வெகுதானிய வருஷம் சித்திரை மாதம்
**22** ஆம் திகதி (05 - 05 – 1998) செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**சிவஸ்ரீ சி. சச்சிதானந்தக் குருக்கள்**

அவர்களின்

தசாகம்: சித்திரை 31 ஆம் திகதி ( 14 - 05 – 1998 )
காலை 10 மணியளவிலும்

கிருகயக்ஞம்: வைகாசி 03-ம் திகதி(17-05-1998) அன்று நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மயிலணி,
சுன்னாகம். [சி/3736]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**கதிரவேலு சிவபுண்ணியம்பிள்ளை**

தோற்றம் 12 – 11 – 1924 மறைவு 14 – 04 – 1998

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய் இருந்து எமது
இதயத்தில் குடிகொண்ட எங்கள் அன்புத்
தெய்வமே! நீங்கள் திடீரென எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்
கொண்டதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு,இன்று (14- 05- 98) காலையில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியையிலும், அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மருமக்கள்.

தேவாலய வீதி,
சங்கானை. (55980)

## வாராந்த சொற்பொழிவு

கொழும்புத்துறை, மே14

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் அருள்மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு உரை அரங்கும், கலை நிகழ்வுகளும் உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்படும்.

இந்நிகழ்விற்கான அறிமுகவுரையை உடுவில் இந்து இளைஞர் மன்றத்தலைவர் எஸ். தியாகச்சந்திரன் நிகழ்த்துவார். [ஐ-30-173]

## பிண்ணாக்கு விலை அதிகரிப்பு

உரும்பிராய், மே 14

குடாநாட்டில்பிண்ணாக்கு விலை கிலோ 24 ரூபாவாக அதிகரித்துள்ளது.

சிலவாரங்களுக்கு முன்பு இதன்விலை 15 ரூபாவாக இருந்தது.

கொழும்பிலிருந்து வரும் தேங்காய் எண்ணெயின் விலை குறைந்துள்ளது.

இதனால் தேங்காய் எண்ணெய் ஊற்றுபவர்கள் தமது தொழிலைக் கைவிட்டுள்ளனர். ஆகவே இங்கு பிண்ணாக்கு உற்பத்தி நின்று விட்டது. (இ-154)

## வளலாய் கிழக்கு அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம், மே 14

வளலாய் கிழக்குப் பகுதி மக்கள் மீளக்குடியேறியதை அடுத்து அப்பகுதியில் படிப்படியாக அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வளலாய் சந்தை புனர்நிர்மாணம் செய்யப்பட்டதை அடுத்து பிரதான வீதியைத் திருத்தியமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தம்பாலையிலிருந்து வளலாய் ஊடாக பலாலி விமான நிலையத்திற்குச் செல்லும் இந்தப் பிரதான வீதியைத் திருத்தும்வேலைகளில் முதற்கட்டமாக தற்போது வீதியின் இருமருங்கிலும் இருந்த மரம், செடி, கொடிப்பற்றைகள் வெட்டப்பட்டு வருகின்றன. (இ-15)

## தேவை

பெண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள் கீழ் உள்ள விலாசத்தில் கூடிய விரைவில் தொடர்பு கொள்ளவும்.

றொஷான் தையலகம்
மின்சார வீதி,
யாழ்ப்பாணம்
(55973)

## நன்றி ஸ்துதிகள்

இறைவன் செய்த நன்மைக்கு நன்றி ஸ்துதிகள்!
நான் கேட்டுக் கொண்டபடி யாவையும்
நிறைவு செய்த இறைவனுக்கும்
**புனித வேளாங்கண்ணி மாதாவுக்கும்,**
**புனித யூதா ததேயுவுக்கும்**
நன்றி வணக்கம் தெரிவிக்கின்றேன்.

இறைவனின் அடியாள்

(சி-3737)

## 10 ஆம் ஆண்டு நினைவலை

மலர்வு 24 — 01 — 1924



உதிர்வு 14 — 05 — 1988

அமரர்
**சவரிமுத்து அம்புறோஸ்**
(இளைப்பாறிய E. O. A. கச்சேரி, யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் பத்து சென்றாலும் ஆறிடுமோ
எம்இதயம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட
அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

151, 4ஆம் குறுக்குதெரு,
யாழ்ப்பாணம். (55981)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லத்துரை வரதலிங்கம்**
(இளைப்பாறிய அதிபர், யாழ்/ வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்)

மலர்வு 25 – 09 – 1929 உதிர்வு 12 – 05 – 1990

திதி:- 1998 — 05 — 14

''எண்ணங்கள் பலமோதி திசைமாறிடினும்
எட்டாம் ஆண்டதனில் ஏற்றம் தரும்
உங்கள் நினைவுகள்.''

குடும்பத்தினர்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (55989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் எதிர்வரும்...

(முதலாம் பக்கத் தொடர்)
விட்ட ஒரு தனிச்சமர் என்ற ரீதியில் தமிழீழ போராட்ட வரலாற்றில் மட்டுமன்றி, உலக போரியல் வரலாற்றிலும் மிகவும் நீண்டதொரு சமராக இது முக்கியத்துவம் பெறுகிறது.

அரச படை எடுப்பை மூர்க்கமாக எதிர்த்துப் போராடி அதன் நகர்வு வேகத்தைத் தடுத்து நிறுத்தி வன்னிக்காட்டுக்குள் முடக்கி வைத்து உலகஇராணுவ வரலாற்றில் ஓர் ஒப்பற்ற சாதனையை எமது விடுதலை இயக்கம் நிலைநாட்டியிருக்கிறது.

### சமர்களுக்கு எல்லாம் தாய்ச்சமர்

''வெற்றி உறுதி'' சமர் சாதாரண சமர் அல்ல. சமர்ளுக்கெல்லாம் தாய்ச்சமராக எமது மண்ணில் நிகழும் பெருஞ் சமர்.

இந்தச்சமரில் தனது முழுப் பலத்தையும், வளத்தையும் குவித்து அரசு போரிடுகிறது. மூன்று பெரும் படைப்பிரிவுகளைச் சேர்ந்த 30 ஆயிரம் இராணுவத்தினரை—

விசேட பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகளை—

பின்னணிப் படைகளாக கடற்படையினரும், காவல் படையினருமாக பாரிய படைப் பலத்தோடு இந்தச் சமர் நிகழ்கிறது.

கனரக ஆயுத சக்தியாக பெருமளவு பீரங்கிகளும், டாங்கிகளும் தரைப்படைக்கு வலுச்சேர்க்க விமானப்படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்களும், தாக்குதல் ஹெலிகளும் இந்தச் சமரில் பெரும் பங்கு வகிக்கின்றன.

ஒரு பகைநாடு மீது ஆக்கிரமிப்புத் தாக்குதலை நடத்துவது போன்று அரசு தனது படைப் பல சக்தியை ஒன்று குவித்து தமிழீழத்தின் இதய பூமியான வன்னி மண் மீது படை எடுத்தது.

### படை எடுப்பின் நோக்கம் என்ன?

இந்தப் பெரும்படை எடுப்பின் இராணுவக் குறிக்கோள் என்ன? அரசியல் ரீதியான அந்தரங்க நோக்கம் என்ன?

தமிழரின் போக்குவரத்துக்கு வசதியாக கண்டி நெடுஞ்சாலையைத் திறந்து விடுவதுதான் 'வெற்றி உறுதி' யின் இராணுவ இலக்கு என அரசு கூறிவருகிறது.

ஆனால் இப் படை எடுப்பின் உண்மையான நோக்கம் இதுவல்ல.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் பின்னணியில் மிகவும் ஆபத்தான நாசகாரமான மோசங்கள் இருக்கின்றன.

கண்டி நெடுஞ்சாலை வன்னி மாநிலத்தின் இதயத்தை ஊடறுத்துச் செல்கின்றது. இந்த நெடுஞ்சாலையை கைப்பற்றுவதன் மூலம் வன்னியை இரு கூறுகளாகத் துண்டாடி தமிழர் தாயகத்தின் புவியியல் ஒற்றுமைப்பாட்டைச் சிதைத்து விடலாம் என அரசு எண்ணுகிறது.

அடுத்ததாக வன்னி பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் என்பது அரசுக்குத் தெரியும்.

இங்கு தான் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமும், பாசறைகளும், நிர்வாகக் கட்டமைப்புக்களும் உள்ளன என்பதும் தெரியும்.

எனவே வன்னியின் இதயம் மீது படை எடுப்பை நடத்தினால் புலிகள் இயக்கம் போருக்கு முகம் கொடுத்தே ஆக வேண்டும் என அரசு எண்ணியது.

இச் சூழலில் பாரிய படைப் பலத்தையும், படைக்கலச் சக்தியையும் பயன்படுத்தினால் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தை அழித்து அதன் மூலம் தமிழரின் தேசிய சுதந்திர இயக்கத்துக்கு முடிவு கட்டிவிடலாம் என அவர்கள் கருதினர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து வட தமிழ் ஈழத்தை தென் இலங்கையுடன் இணைத்துவிட்டால் தமிழரின் தேசிய பிரச்சினை இராணுவ ரீதியில் முடிவாகி விடும் என அரசு கணக்குப் போட்டது.

இந்தத் தந்திரோபாயத்தையே சமாதானத்துக்கான போர் என அரசு பூடகமாகச் சொல்லிவருகிறது. இத்தகைய நோக்குடனேயே வெற்றி உறுதி படை எடுப்பு வன்னி மண் மீது பாதங்களைப் பதித்தது.

இந்தப்படை நடவடிக்கை மிகவும் ஆபத்தான நோக்கத்தைக் கொண்டது என நாம் ஆரம்பத்தில் இருந்தே புரிந்து கொண்டோம்.

இது எமது தாயக நிலத்தின் ஒற்றுமைப்பாட்டுக்கு மட்டுமன்றி எமது விடுதலை இயக்கத்தின் இருப்புக்கே எழுந்த மாபெரும் சவாலாகும்.

எனவே இந்தப் படை எடுப்பை எமது முழுப்பலத்தையும் பிரயோகித்து மூர்க்கமாக எதிர்ப்பதென திடசங்கற்பம் எடுத்தோம். இந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில் இராணுவத்தின் அசைவியக்கத்தைத் தடுத்து நிறுத்தி பலமான பதிலடிகள் கொடுக்கும் வகையில் நாம் எமது போர் முறைத் திட்டத்தையும், யுக்திகளையும் வகுத்தோம்.

'வெற்றி உறுதி' நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசும், இராணுவ தலைமையும் எமது இயக்கத்தின் படைப்பலம் பற்றியும், போராடும் உறுதி பற்றியும் ஒரு தவறான மதிப்பீட்டை வைத்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்து நாம் மேற்கொண்ட தந்திரோபாய பின்நகர்வையும் —

''எடிபல'' இராணுவ நடவடிக்கைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்காததையும் —

அடிப்படையாக வைத்து புலிகள் இயக்கம் பலவீனமடைந்துவிட்டதாக அரசு கருதியது.

இந்த தவறான கணிப்பீடு காரணமாக வெற்றி உறுதிக்கு குறுகிய காலக் கெடுக்களை வகுத்து தலை குனிய நேரிட்டது.

வெற்றி உறுதி இராணுவத்தை எதிர்கொள்ள நாம் தயார் நிலையில் இருந்தோம். பெரும் எடுப்பிலான ஒரு மரபு வழிப் போருக்கு முகம் கொடுக்கும் வகையில் நாம் எமது இராணுவக் கட்டமைப்பை சீர்செய்தோம்; ஒழுங்கமைத்திருந்தோம்.

### முல்லைத்தீவு வெற்றி உதவியது

முல்லைத்தீவில் கிட்டிய மாபெரும் வெற்றியை அடுத்து எமது படைக்கலச் சக்தி பலம் பெற்றிருந்தது.

இந்த ஆயுத பலத்தை அடிப்படையாக வைத்துப் பீரங்கிப் படையணி, டாங்கி எதிர்ப்புப் படையணி, விமான எதிர்ப்புப் படையணி என்ற ரீதியில் புதிய படைப்பிரிவுகளைக் கட்டி எழுப்பினோம்.

இறுக்கமான, ஒழுங்கமைப்புடன் பன்முகத் தாக்குதலை நிகழ்த்தவல்ல படையணிகளாக இவை உருவாக்கப்பட்டன.

அரசின் படை நகர்த்தல், போர் உபாயம் பற்றி எமது நீண்டகால அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு திகைப்பூட்டும் வெற்றிகர தாக்குதல் உத்திகளையும், தற்காப்பு முறைகளையும் வகுக்க—கேந்திரமான இடங்களில் மிக உறுதியான பாதுகாப்பு நிலைகளை அமைக்க —இப்படியாக பெரும் படை எடுப்பை எதிர்கொள்ள— நாம் எம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டோம்.

சென்ற ஆண்டு மே 13 இல் தொடங்கி இன்றுடன் 365 நாள்கள் வரை நீடித்திருக்கும் 'வெற்றி உறுதி' [illegible]னது, பாரிய அளவிலான தாக்குதல்களையும், மிகவும் உக்கிரமான சண்டைகளையும், பலரகமான மோதல்களையும் கொண்ட பாரிய போர் நடவடிக்கை ஆகும்.

வலிந்து தாக்குதல், தற்காப்புத் தாக்குதல், அதிரடித் தாக்குதல் என்ற ரீதியில் இராணுவம் மீது நாம் நிகழ்த்திய தாக்குதல்கள் இராணுவத்துக்கு என்றுமில்லாத பேரிழப்புக்களை ஏற்படுத்தியதோடு இராணுவத்தின் நகர்வு வேகத்தைத் தடுத்து நிறுத்தியது.

தாண்டிக்குளத்திலும், பின்னர் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளத்திலும் நாம் மேற்கொண்ட வெற்றிகரமான வலிந்து தாக்குதல்கள் இராணுவத்தை சிதறடித்து நிலைகுலைய வைத்தன.

இந்த இரு தாக்குதல்களிலும் ராணுவத்துக்கு பெரும் உயிர்ச்சேதமும், பாரிய அளவிலான ஆயுதத் தளபாட இழப்பும் ஏற்பட்டன.

### ஊடுருவித் தாக்கும் திறன்

வன்னி மண்ணை ஆக்கிரமித்து எந்தத் திசையில் எத்தகைய பாதையை அமைத்தாலும் அதனை ஊடுருவித் தாக்கி அழிக்கும் துணிவும், ஆற்றலும் பலமும் புலிப் படைக்கு உண்டு என்பதை இத்தாக்குதல்கள் உணர்த்தியிருக்கின்றன.

புலிப்படை வீரர்களின் வலிமைக்கும், தற்காப்பு போருக்கும் தலை சிறந்த உதாரணமாக விளங்கியது புளியங்குளம்.

இங்குபலமான பாதுகாப்பு நிலைகளை அமைத்து 5 மாதங்கள் வரை நிலைதளராது நின்று இராணுவத்தின் பல்வேறு முயற்சிகளை முறியடித்தார்கள் எமது வீரர்கள்.

புலி வீரர்களின் மூர்க்கமான தற்காப்புத் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாது கண்டி வீதிப் பாதையை விட்டு காடுகளுக்குள் அகலக்கால் நீட்டியது இராணுவம்.

பின்னர் புதூர்சந்தியிலும், மன்னகுளத்திலும், சமீபத்தில் ஒலுமடுவிலும் புலிகள் மேற்கொண்ட துணிகரமான தற்காப்புத் தாக்குதல்கள் இராணுவத்துக்கு பெரிய அளவில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதோடு இராணுவத்தின் மனவுறுதியையும் உடைத்தது.

புளியங்குளத்தையடுத்து இப்பொழுது மாங்குளத்தைக் கட்டிக்காத்துப் போரிடும் எமது வீரர்கள் இராணுவத்துக்கு சிம்மசொப்பனமாக விளங்கி வருகிறார்கள்.

வெற்றி உறுதி சமரில் இராணுவம் தனது இலக்கை அடைவதற்காக சகலவிதமான தந்திரோபாயங்களையும் கையாண்டது. போரியல் விஞ்ஞான ஏடுகளிலுள்ள புதிய புதிய உத்திகளையும் பரீட்சித்துப்பார்த்தது.

போதாக் குறைக்கு அந்நிய இராணுவ மேதாவிகளின் செயல்முறைத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்தியது.

ஆயினும் எந்தப் போர்த் தந்திரங்களும் புலிகளிடம் பலிக்கவில்லை. இவற்றினால் புலிகளின் பாதுகாப்பு வியூகங்களை உடைக்கமுடியவில்லை.

### ஓராண்டுச் சமரில் பேரிழப்பு

இத் தந்திரோபாய முன்னேற்ற முயற்சிகள் இராணுவத்துக்கு பின்னடைவுகளையும், பேரிழப்புக்களையுமே ஏற்படுத்தின. இந்த ஓராண்டுச் சமரில் இராணுவம் மூவாயிரத்துக்கு மேற்பட்ட படையினரை பலி கொடுத்திருக்கிறது. ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் உடற்சேதம் அடைந்திருக்கின்றார்கள். இந்த நீண்ட சமரில் சிறப்புப் பயிற்சி பெற்ற முன்னணிப் படை [illegible] பல சிதைக்கப்பட்டிருக்கின்றன. டாங்கிப்பிரிவுகள் நாசஞ் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயுதக் களஞ்சியங்கள், வெடி மருந்துக் குதங்கள், இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் பெருந்தொகையான ஆயுத தளபாடங்களை புலிகள் இயக்கம் கைப்பற்றியிருக்கிறது. இராணுவத்துக்கு இழப்பு மிகப்பெரிது. இத்தனை இழப்புக்களை சந்தித்தும் இராணுவம் இன்னும் தனது இலக்குகளை அடையமுடியவில்லை.

இந்தப் பெருஞ் சமரை நாம் எதிர்கொண்ட ஒவ்வொரு தடவையும் போர்க்கலையில் எமக்குப் புதிய அனுபவத்தைப் பெற்றுத் தந்தது. இதனால் எமது போராடுந் திறன் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறது.

### மன உறுதியும் துணிவும்

இந்தப்போரானது எமது போராளிகளின் மனோ பலத்தையும், இலட்சிய உறுதியையும் மேலும் வலுவடையச் செய்திருக்கிறது.

இந்த ஓராண்டு அக்கினிப் பிரவேசத்தில் நாம் எரிந்து போகவில்லை. மாறாக நாம் புத்துயிர் பெற்றுப் புதிதாக எழுந்தோம். பலமாக எழுந்தோம். இராணுவத்தின் பலம் பெரிது. ஆயுத பலமும் பெரிது. வளமும் பெரிது. இந்த வகையில் சமர்க்களம் இராணுவத்துக்கே சாதகமாக இருந்தது. ஆனால் இராணுவத்திடம் இல்லாத ஒரு பலம் மட்டும் எம்மிடம் இருந்தது. அது தான் எமது போராளிகளின்மனோபலம். எமது போராளிகளிடமிருந்த அசைக்கமுடியாத மனவுறுதியும், அதனால் பிறக்கும் அபாரமான துணிவுமே வன்னிக்களத்தில் எமது அதிசக்தி வாய்ந்த ஆயுதமாக இருந்தது.

மலையாக அவர்களும், மடுவாக நாமும் சமச்சீரற்ற இராணுவ நிலையில் இருந்த போதும் இந்த நீண்ட சமரில் எமது போராளிகள் வெளிக்காட்டிய நெஞ்சுறுதியானது எமக்கு மலையான பலத்தைக் கொடுத்தது.

அந்த மலையான பலமே வன்னியில் இராணுவத்தை நிலைகுலைய வைத்தது.

ஓயாத புயலாக ஓராண்டு காலம் நீடித்த இப்பெருஞ் சமரில் எத்தகைய துன்பங்களைச் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளைச் சமாளித்து எத்தகைய ஆபத்துக்களை எதிர்கொண்டு எமது போராளிகள் மனவுறுதியோடு போராடினார்கள் என்பதை நான் நன்கறிவேன்.

நெருப்பு மலையாகஓயாது பொழிந்த பீரங்கி எறிகணைகளுக்கும், மின்னல் வேகத்தில் நிகழ்ந்த விமானக்குண்டு வீச்சுகளுக்கும் முகங்கொடுத்து ஓய்வில்லாது, உறக்கமில்லாது, உருப்படியான உணவில்லாது எமது வீரர்கள் சளைக்காமல் போரிட்டார்கள்.

வன்னிக்களத்தில் இயற்கை அன்னையும் எமது போராளிகளுக்கு இரக்கங் காட்டவில்லை. மாரிப் பெரு மழையும், உறைய வைக்கும் பனியும், கோடையும் கொளுத்தும் வெயிலும், பாம்பும், நுளம்பும், மலேரியாவுமாக வன்னிக் காட்டின் கொடுமையான சூழலையும் எமது போராளிகள் சகிக்க வேண்டியிருந்தது.

போர் ஓய்ந்த வேளைகளிலும் எமது போராளிகள் ஓய்வெடுத்துக்கொள்ளவில்லை. பதுங்கு குழிகள் வெட்டி, பாதுகாப்பரண்கள் கட்டி, அந்தக் காப்பரண்களில் குடியிருந்து, இரவு பகலாக விழித்திருந்து எமது மண்ணைக் காப்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

வெற்றி உறுதி சமரில் எமது போராளிகள் வெளிப்படுத்திய மனவலிமையும், செயலாற்றலும், அபாரமான சகிப்புத்தன்மையும் பெரிதும் பாராட்டத்தக்கவை.

எமது வீரர்களின் இந்தத் தலைசிறந்த போர்ப் பண்புகளைக் கண்டு நான் பெருமை கொள்ளுகின்றேன்.

இந்த வரலாற்றுச் சமரில் எமது தளபதிகள் வகித்த பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தளபதிகளின் தளராத உறுதியும், திறனாற்றலும், கடும் உழைப்பும் காரணமாகவே வன்னிக் களத்தில் நாம் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்ட முடிந்தது.

படையணிகளைச் சீரமைத்து, ஒழுங்கமைத்து, தாக்குதல் திட்டங்களைச் செம்மையாகச் செயற்படுத்தி களத்தில் போராளிகளை ஊக்குவித்து வழிநடத்தி எமது தளபதிகள் காட்டிய செயற்திறன் பெரிதும் பாராட்டத்தக்கது.

பல்வேறு பிரிவுகளினதும் ஒட்டுமொத்த முயற்சிகள் ஒன்றுகுவிக்கப் பட்டதாகவே இப்பாரிய படையெடுப்புக்கு நாம் முகங்கொடுத்தோம்.

ஒவ்வொரு பிரிவும் தமது பணியைத் திறம்படச் செய்தது.

பல முன்னேற்ற முயற்சிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்ட பீரங்கிப் படைப்பிரிவு —

பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டு இராணுவத்தின் நிலைகளையும் நகர்வுகளையும் கண்காணித்து அறிவித்த வேவுப் பிரிவு—

இராணுவத்தின் டாங்கி, கவசவாகன அணிகளை உடைத்த டாங்கி எதிர்ப்பு விஷேட அணி —

இராணுவத்தின் மனவுறுதியைச் சிதறடித்த கரும்புலி அணி —

தாக்கும் விமானங்கள் பலவற்றைக் களத்திலிருந்து அகற்றிய விமான எதிர்ப்பு அணி — ஆகிய படைப்பிரிவுகளின் சாதனைகள் பாராட்டுக்குரியவை.

### சமர் தொடரும்

நாளையுடன் இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் வெற்றி உறுதிச் சமர் மீண்டும் தொடர்ந்து நீண்டு செல்ல இருக்கிறது.

இதற்கு காலவரையறை இடுவதற்கு அரசுக்கு இப்பொழுது துணிவில்லை. எனினும் இந்த இராணுவ நடவடிக்கையோடு அரசியல் நோக்கங்களும் பின்னிப் பிணைந்து கிடப்பதால் இந்தப் பாதை திறப்புச் சமரை அரசு கைவிடப் போவதில்லை.

இராணுவக் கட்டளை பீடத் தளபதிகளை மாற்றியும், இராணுவ அதிகாரிகளுக்கு முதிராநிலைப் பதவி உயர்வுகளை வழங்கியும், இராணுவத்திலிருந்து விலகியவர்களுக்கு மாறி மாறி மன்னிப்புக்களை வழங்கியும், இராணுவ இயந்திரத்தை முடுக்கிவிடுவதற்கு அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது.

இதனால் மீண்டும் வெற்றி உறுதிச் சமர் தொடரும். மீண்டும் இந்த மண்ணில் இரத்தம் ஆறாக ஓட இருக்கிறது. மீண்டும் ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் பலிக்கடாவாகப் போகிறார்கள்.

வெற்றி உறுதிச் சமரின் கள நிலை உண்மைகளை அரசு இருட்டடிப்புச் செய்து வருகிறது.

பேரிழப்புக்களை மூடி மறைத்து, பொய்யான பரப்புரைகளைச்செய்து ஏமாற்றி வருகிறது.

ஆயினும் இந்த இராணுவ நடவடிக்கை ஓராண்டுகாலம் நீடித்த தனிச் சமராக உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும் உண்மையை அரசால் மூடி மறைக்க முடியவில்லை.

இச் சமர் நீண்டகால நீடிப்புச் சிந்தனையையும், அதன் முக்கியமற்ற எதிர்காலத்தையும் கணிப்பிடும் பொழுது இப் படை நடவடிக்கையை அரசுக்கு ஏற்பட்ட பாரிய இராணுவப் பின்னடைவாகவே உலகம் மதிப்பீடு செய்யும்.

அத்தோடு இச்சமரில் எமது இயக்கம் வெளிப்படுத்திய செயற்திறன் உலக இராணுவ நிபுணர்களை வியப்பிலாழ்த்தியிருக்கிறது.

தமிழர் படையான புலிப்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our DEEPEST SYMPATHIES

We, the 2nd Year English Literature Students Express Our heart - felt condolence on the demise of

**Mr. NAGALINGAM KANDIAH**

beloved father of our batch mate
Mrs. Ranjini Naguleswaran -

2nd Year English Literature Students,
University of Jaffna.

(55995)

---

நாரந்தனை - சரவணை கர்ணந் தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## வருடாந்த மகாசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 17 — 05 - 1998 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் நடைபெறும். முருகன் அடியார்கள் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. க. நடராசா,
தலைவர்,
மேற்படி ஆலய பரிபாலனசபையின் சார்பில்.

(55992)

---

## நன்றி நவிலல்

கற்கோவளம்
செ. குணசேகரம் தம்பதிகளின் புதல்வன்
**பரணீதரனுக்கும்**
பருத்தித்துறை கந்த உடையார் ஒழுங்கை
சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வி
**சகுந்தலாவுக்கும்**

இன்பருட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்துகொண்டுமணமக்களுக்கு வாழ்த்துத்தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பெற்றோர்.

பருத்தித்துறை. (55993)

---

## கண்ணீர் அஞ்சலி

குமர கோட்டம் சன சமூக நிலையத்தின்
உப தலைவர்
இ சீவரத்தினம்
அவர்களின் அன்புத்தாயார்
**இராசதுரை தங்கம்மா**
(அம்மாளாச்சி)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது நிலையத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துகின்றோம்.

கோண்டாவில் கிழக்கு. -நிர்வாகிகள்.

(55411)

---

## கிராம அபிவிருத்திச் சங்கம்

நீராவியடி

## விஷேட பொதுச் சபைக் கூட்டம்

எதிர்வரும் 17-05-98 ஞாயிறு மாலை 3 மணிக்கு யா/ இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்துக்கு சகல பொதுச் சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ந நந்தகுமார்
கௌரவ செயலாளர்

(55998)

---

## தெல்லிப்பழை சிவன் ஆலய

(சந்திரமௌலீஸ்வரர்)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி ஆலய கட்டட நிதிக்காக 12-05-98இல் நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | — | 1680 |
| 2 ஆம் பரிசு | — | 7739 |
| 3 ஆம் பரிசு | — | 7242 |

ஆறுதல் பரிசில்கள் — 9460, 1537, 9151

அதிர்ஷ்டசாலிகள் 21 - 05 - 98 இற்கு முன்னதாகப் பற்றுச்சீட்டுடன் சிவன் ஆலய இந்து இளைஞர் மன்றத்துடன் தொடர்புகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

மா. இராசா
செயலாளர்

(55409)

---

## உள்ளூராட்சி ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், மே 14

உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாத ஓய்வூதியம் இன்று இலங்கை வங்கிக் கிளை ஊடாக வழங்கப்படவிருக்கிறது.

ஓய்வூதியம் வழங்கத் தேவையானகட்டுநிதிகிடைக்காததால் ஓய்வூதியம் வழங்குவது தாமதமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வன்னியில் எழுச்சி.

(முதலாம் பக்கத் தொடர்)

டங்கள், கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

எழுச்சி நாளையொட்டி நேற்று முன்தினம் மாங்குளம் மேற்கு, முள்ளியவளை, முழங்காவில் ஆகிய இடங்களிலிருந்து அஞ்சலோட்டமாக மாணவர்கள், பொதுமக்கள் போர்முனைக்குச் சென்று வாழ்த்துச் செய்திகளை அங்கிருந்த தளபதி கருணாவிடம் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் எழுச்சி விழா இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்கன. (இ-3-6-21-164)

## இந்தியாவுக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

தியாவுக்கு அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் நம்புகின்றனர்.

இந்தியாவுக்கான தனது உதவிகள் அனைத்தையும் நிறுத்தப்போவதாக ஜப்பானும் அறிவித்துள்ளது.

அதே சமயம் பொருளாதாரத்தடைகளால் ஏற்படக்கூடிய எந்த ஒரு நெருக்கடியையும் சமாளிக்கும் ஆற்றல் இந்தியாவுக்கு இருப்பதாகப் புதுடில்லியில் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-6-3)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊர்ஜிதம் செய்யாவிட்டாலும் விடுதலைப் புலிகளாலேயே செய்யப்பட்டிருக்கலாம் என நாம் சந்தேகிக்கிறோம் — என்றார்.

இச்சம்பவத்தைக் கண்டித்து ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் வவுனியா மாவட்டச் செயலாளர் என். சிவசக்தி ஆனந்தனும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். (இ-164-3)

## வன்னியில்..

(9 ஆம் பக்கத் தொடர்)

படை வீரம்மிக்க ஒரு தேசிய விடுதலை இராணுவமாகப் பெரு வளர்ச்சி கண்டிருக்கின்றது என்ற உண்மையையும் உலகம் உணர்ந்திருக்கிறது.

வெற்றி உறுதிச் சமர் அரசைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது.

தமிழரின் தாயக மண்ணை இராணுவ பலத்தால் அடக்கி ஆளவேண்டுமென்ற எண்ணம் அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்கின்றது.

நாம் எமது தாயக மண்ணை எமது உயிரினும் மேலாக நேசிக்கின்றோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நிகரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது.

எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்போரை எமது மண்ணிலிருந்து அகற்றும் வெற்றி உறுதிச் சமர் ஓய்ந்துவிடப்போவதில்லை.

வெற்றி உறுதிச் சமரில் வீரமுடன் களமாடி எமது மண்ணின் விடிவுக்காக மடிந்துபோன 1,300 போராளிகளுக்கும் எனது சிரந்தாழ்த்தி வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சில பிரதேச சபைகளில் ஈ. பி. டி. பி. பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், மே 14

ஜனவரி 29ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. சார்பில் போட்டியிட்டுத் தெரிவான சில பிரதேசசபைகளின் தலைவர், உப தலைவர்கள் கடந்த திங்கட்கிழமை பதவிப்பிரமாணம் செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

பதில் நீதிவானும், சமாதான நீதிவானுமான க. கேசவன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் இடம்பெற்றது என எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

ஆனால் —

தமது கட்சியின் சார்பில் தெரிவான எவரும் இன்னும் பதவிப்பிரமாணம் செய்யவில்லை என்றும் —

பதவியேற்பது தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடப்படுவதாகவும் —

அதன் பின்பே பதவிப் பிரமாணம் செய்வது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் —

ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் நேற்று முன்தினம் இரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

சில பிரதேசசபைத் தலைவர்கள் பதவியேற்ற பின்னரும் அது பற்றிய தகவலை ஈ. பி. டி. பியினர் வெளியிடாமல் இரகசியம் பேண முற்படுவதற்கான காரணம் என்ன வென்பதை அறியவோ, ஊகிக்கவோ முடியவில்லை. [இ-9-111]

## கலந்துரையாடல்

இலங்கை உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தின் யாழ். நிலைய மாணவர்ஒன்றியத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக் கிழமைநண்பகல் ஒருமணிக்கு கல்விநிறுவனத்தில் நடைபெறும்.

பகல்நேர, மாலைநேர மாணவர்கள் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப் பட்டுள்ளனர். (இ-3)

## தமிழ்த்தினப் போட்டி

வரணி, மே 15

வடமராட்சிகிழக்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி இன்று வியாழக் கிழமை அம்பன் அ.மி. த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ-171)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

## கி. மீற்றருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் இரு தரப்பும் அறிவிக்கும் எண்ணிக்கையை நோக்கும்போது ஒரு கிலோ மீற்றருக்கும் 150 உயிர்கள் இழக்கப்படுகின்றன என்றார் அவர்.

இராணுவ செய்தி விமர்சகர் இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

வெற்றி உறுதி நடவடிக்கை வெற்றியைத் தந்ததோ தோல்வியைத் தந்ததோ என்பதைக் கூற முடியாது. ஆனால் ஆயிரத்து 400 படையினர் உயிரிழந்துள்ளனர். கோடிக்கணக்கான ஆயுதங்கள் இழக்கப்பட்டுள்ளன; அவை புலிகளிடம் போயிருக்கலாம்.

வெற்றி உறுதிக்கு காலக்கெடு விதிப்பது ஒரு தேசியப் பகிடியான விடயமாகும்.

இந்த நடவடிக்கையில் 96சதவீதம் பூர்த்தியாகிவிட்டது என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். ஆனால் தற்போது நடைபெறும் யுத்த ஆயத்தங்களை நோக்கும் போது மிகுதி 4 சத வீதத்தை பூர்த்திசெய்ய இவ்வளவு முயற்சிகள் தேவையா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது— என்றார். (இ-3-10)

---

## பிரார்த்தனை வேண்டுகோள்

முத்த சமய விரிவுரையாளரும்
பிரபல ஆங்கில ஆசிரியருமான
உயர்திரு பிரம்மஸ்ரீ
**சபாரத்ன ஈஸ்வரசர்மா**
(காரைநகர்)

புதிய செங்குந்தா வீதி, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கில் வசிப்பவர். திடீரென நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக 29 ஆம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரார்த்தனை மூலம் அரியன பெறலாம் என்ற பெருநம்பிக்கையுடைய ஐயா அவர்கள் விரைவில் குணமடைந்து, பூரண உடல் நலம் பெற்றுத் தனது தொண்டு. பணி இவற்றை முழுதாக நிறைவேற்றும் ஆற்றல் வேண்டி, அவரது மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள், அன்பர்கள், அனுதாபிகள் அனைவரும் ஐயா அவர்களுக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்

என்று பணிவன்புடன் வேண்டும்
மாணவர்கள், நண்பர்கள்,
அன்பர்கள்.

(சி/3740)

---

**ராஜா** யாழ்ப்பாணம்
பல வருடங்களுக்குப் பின் மீண்டும் ஆரம்பம்.
2ஆவது வாரமாக
மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா நடித்த
**ஒளிவிளக்கு**
தினசரி பிற்பகல் 1-00, 4-00 மணி (புதிய நேரம்)
சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்
காலை 10-00, 1-00, 4-30 மணிக்கும் காட்சிகள்
காண்பிக்கப்படும். (சி/3738)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org